08TH MARCH 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 72 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com



## அதிக காலம் வாழும் பெண்கள்!

அமெரிக்க ஆய்வில் தகவல்!

ஆண்களை விட பெண்கள் அதிக காலம் உயிர் வாழ்வதாக

03ம் பக்கம்பார்க்க...

# உள்ளூராட்சி தேர்தலில் ஐ.ம.சக்தியின்; சிறுபான்மை கட்சிகள் தனித்துப் போட்டி!

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதற்கான முஸ்தீபுகளில் இறங்கியுள்ளன.ஐக்கிய மக்கள் சக்தியின் பூரண இணக்கப்பாட்டுடன் சிறுபான்மை மக்கள் வசிக்கும் பகுதிகளில் தனித்துப் போட்டியிடுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அக் கட்சிகளின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நிஸாம் காரியப்பர், ஐக்கிய மக்கள் சக்தியின் பூரண இணக்கப்பாட்டுடன் தமது கட்சி இத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாகவும், இதனடிப்படையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் சகல உள்ளூராட்சி

04ம் பக்கம்பார்க்க...

## உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்படுமா?

### நீதிமன்றம் செல்லும் எதிர்க்கட்சிகள்!

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான காலக்கெடுவிற்கு முன்னர், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோருவதற்கு எடுக்கப்பட்ட முடிவுக்கு எதிராக

03ம் பக்கம்பார்க்க...

## ஓ.எல்.பரீட்சை 17 ல் ஆரம்பம்

### 11முதல் கற்றல் செயற்பாடுகளுக்கு தடை!

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

இதற்கமைய இம் மாதம் 11 ஆம் திகதி

03ம் பக்கம்பார்க்க...

## பெண்களின் முன்னேற்றத்துக்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

### மகளிர் தின வாழ்த்தில் ஜனாதிபதி



சர்வதேச மகளிர் தினம் என்பது பெண்களின் உரிமைகளுக்கான செயற்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

தொழில் செய்யும் நேரத்தைக் குறைத்தல், மிகச் சிறந்த ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி சுமார் 15,000 பெண்கள் நியூயோர்க் நகரில் நடத்திய பேரணியின்

14ம் பக்கம்பார்க்க...

## தென்கிழக்கு பல்கலை உப வேந்தர் பதவிக்கு ஒன்பது பேர் களத்தில்!

(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது மூன்றாண்டு பதவிக்காலம் கடந்த

03ம் பக்கம்பார்க்க...

## 51 மெ.தொன் பேரீத்தம் பழங்களை அன்பளிப்பாக வழங்கிய குவைத்



(அஷ்ரப் ஏ சமத்)

குவைத் தூதரகம் 51 மெ.தொன் பேரீத்தம்பழங்களை இலங்கை முஸ்லிம்களுக்கு அன்பளிப்பாக வழங்கி

02ம் பக்கம்பார்க்க...

## இஸ்ரேலின் கடும் கட்டுப்பாடுகளைத் தாண்டி ஜும்ஆவுக்கு திரண்ட பலஸ்தீன் மக்கள்



இஸ்ரேலின் பாரிய கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன முஸ்லிம்கள் ரமழானின் முதல் வெள்ளிக்கிழமை ஆக்கிரமிக்கப்பட்ட ஜெருசலேமில் உள்ள அல்-அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் தொழுது பிரார்த்தனை செய்கின்றனர்.

## முஸ்லிம் சேவை நேரம் குறைப்பு; ஆளுனருக்கு வழங்கிய வாக்குறுதியை மீறிய கூட்டுத்தாபன பணிப்பாளர்!

### பல தரப்பிலும் அதிருப்தி!

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை நேரமாற்றம் குறித்து மேல் மாகாண ஆளுநர் ஹனீப்

05ம் பக்கம்பார்க்க...

## ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமையை இரத்துச் செய்க

### மக்கள் போராட்ட முன்னணியின் தலைவர் துமிந்த நாகமுவ வேண்டுகோள்!



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமையை இரத்து செய்ய வேண்டும் என மக்கள் போராட்ட முன்னணியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில்

05ம் பக்கம்பார்க்க...

## கொழும்பு நகரில் ரமழான் கலாச்சார விழா

### மார்ச் 15 முதல் 31 வரை மேல் மாகாண சபை திட்டம்!

(அஷ்ரப் ஏ சமட்)

புனித ரமழான் மாத்தை முன்னிட்டு அற்காக விழா வொன்றை ஏற்பாடு செய்ய

08ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

# மாவனல்லை பிரதேச செயலகத்தில் சபுமல் நிறுவனத்துக்குப் பாராட்டு









சப்ரகமுவ மாகாணத்தில் முதல் தர கைத்தொழில் நிறுவனம் என்று தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட சபுமல் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தை பாராட்டும் வகையில் மாவனல்லை பிரதேச செயலகத்தில் நிகழ்வொன்று நடைபெற்றது.

கேகாலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திலிப் நிசாந்த சில்வா, மாவனல்லை பிரதேச செயலாளர் விஜானி ரத்னசேகர ஆகியோர் சபுமல் நிறுவனத்தின் தலைவர் கமால்தீன் மரிக்கார் இனை கௌரவித்து விருது வழங்கி பாராட்டிய போது பிடிக்கப்பட்ட படங்கள். இந்த நிகழ்வு நேற்று (07) திகதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

**(அமீர் ஹுசைன்)**

---

## 51 மெ.தொன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் போது இலங்கையின் நான்கு அமைப்புகளுக்கு பேரீத்தம்பழம் கையளிக்கப்பட்டது.

குவைத் தூதரக அதிகாரி ஒஸ்மான்அல் உமர் இதன்போது அல் ஹிமா நிறுவனப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் மற்றும்ஜெம்மியதுஷ் ஷபாப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.தாஸீம் உட்பட மேலும் பல நிறுவனங்களுக்கு இப் பேரீத்தம் பழத் தொகைகளைக் கையளித்தார்.



## ஓ.எல்....

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நள்ளிரவு முதல் இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறை என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தல்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வழக்குத் தொடர எதிர்க்கட்சி முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்கான புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை, மார்ச் 28 ஆம் திகதி வரை செய்யப்படலாம் என்று தேர்தல் ஆணைக்குழு முன்னதாக கூறியிருந்தது.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது மார்ச் 20 ஆம் திகதியுடன் முடிவடைவதால் அந்த நாளிலிருந்து மார்ச் 28 ஆம் திகதி வரை புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் பிரஜைகளுக்கான வாய்ப்பை பறிப்பது நியாயமற்றது என்று கூறி, இந்த வழக்கைத் தாக்கல் செய்து இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவது குறித்து எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சியின் இந்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால், உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

## அதிக...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமெரிக்காவில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவில் பெண்கள் சராசரியாக 80 ஆண்டுகள் வாழ்வதாகவும், ஆண்கள் 75 ஆண்டுகள் வாழ்வதாகவும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதன்படி உடல் நலம் பாதிக்கப்படுதல்,பெருந் தொற்றுகள்,பட்டினி ஆகிய காலப்பகுதிகளில் பெண்களுக்கு அதிக பாதுகாப்பான சூழல் உள்ளதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் ஆண்களுடன் ஒப்பீட்டளவில் குறைவான சுழற்சி காலங்களையே பெண்கள் கொண்டிருக்கின்றனர் என பெரினைன் பெனாயூன் என்ற பேராசிரியர் உறுதிப்படுத்தியுள்ளார்.

பெண்களின் வாழ்நாள் அதிகரிப்புக்கு மரபணு மாற்றங்கள், ஹார்மோன்கள், வாழ்க்கை மமுறை,செயல்படும் முறை என்பன காரணிகளாக விளங்குகின்றன.

## தென்கிழக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

2024.08.08 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் புதிய உபவேந்தர் ஒருவர் நியமிக்கப்படாது பதில் உபவேந்தராக கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய புதிய ஆட்சியின் கீழ் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி விடுத்திருந்தார். அதற்கமைய மார்ச் 06 ஆம் திகதி, 3.00 மணி வரை ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதன் அடிப்படையில், கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எம்.ஐ.எஸ். சபீனா, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக், பேராசிரியர் ஏ.ஜௌபர் மற்றும் கலாநிதி யூ.எல். செயினுடீன் உள்ளிட்ட ஒன்பது பேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய உபவேந்தர், பல்கலைக்கழக பேரவையின் விசேட ஒன்றுகூடல் ஒன்றின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் (Criteria) கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்வர். குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரபல எழுத்தாளர்
ராஜன் ஹூல் எழுதிய
'உயிர்த்த ஞாயிறு அனர்த்த'
(மறைகரம் வெளிப்பட்டபோது)
எனும் நூலை தமிழில் மொழிபெயர்த்து
சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன் அவர்கள்.
அண்மையில் கொழும்பு - இலங்கை மன்ற கேட்போர் கூடத்தில்
வைத்து வெளியீடு செய்திருந்தார்கள்.



இப் புத்தகம் தேவைப்படுவோர் கீழ்வரும்
கணக்கு இலக்கத்திற்கு ரூபா. 900 ஐ
(தபால் செலவு உள்ளடங்கலாக ரூ. 900)
வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை வட்ஸ்அப் செய்யவும்.

Account No: 000250007329
Account Name: NM Ameen
Bank: Sampath Bank
Branch: Pettha Branch
077 2612288

# தேதுகல பள்ளி குறித்து அறிக்கை தயாரிக்க நடவடிக்கை

## முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர் நவாஸ்!

புளத்கொஹூபிடிய பிரதேசத்தில் அமைந்துள்ள தேதுகல பள்ளிவாசல் குறித்து பூரண அறிக்கையொன்றினைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் நவாஸ் தெரிவித்தார்.

புளத்கொஹூபிடிய பிரதேசத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த தேதுகல பள்ளிவாசல் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்வதற்கு முஸ்லிம் சமய விவகார திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அதன் பணிப்பாளர் எம் எஸ் எம் ஸரூக் தெரிவித்தார்.

கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் இந்த பள்ளிவாசல் பற்றி அண்மையில் சமூக ஊடகங்களில் வெளியிட்ட தகவலை அடுத்து பலரும் முஸ்லிம் சமய விவகார திணைக்களத்துக்கு இது தொடர்பாக சுட்டி காட்டி இருந்தனர்.

இதன்படி முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் சபரகமுவ பிரதேசத்தின் அதிகாரிக்கு பணிபுரை வழங்கப்பட்டிருப்பதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

தேதுகல ஆரம்ப காலத்தில் இருந்து சுமார் 300 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசமாகும். அவர்கள் இப்போது அந்த பிரதேசத்தை விட்டு வெளியேறி இருப்பதன் காரணமாக பள்ளிவாசல் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றது.

பள்ளிவாசல் இப்போது சேதம் அடைந்த நிலையில் அப்படியே இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இப்ப பள்ளிவாசலில் செய்ய வேண்டிய பணிகள் சம்பந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. தேசிய நல்லிணக்க அமைச்சர் அஷ்ஷெய்க் முனீர் முழப்பர் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இது தொடர்பாக விடுத்துள்ள பணிபுரையில் இப் பள்ளிவாசல் பற்றி தேடி அது சம்பந்தமாக உடனடியாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்.

இதே நேரம் சபரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிஹால் பாரூக் குறித்த பிரதேசத்துக்கு விஜயம் செய்து இப்பள்ளி வாசலை புனரமைப்பது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேதுகலையில் சுமார் 250 முஸ்லிம் குடும்பங்கள் ஆரம்பத்தில் வாழ்ந்துள்ளனர்.

அங்கிருந்த முஸ்லிம்கள் படிப்படியாக ஏனைய பிரதேசங்களுக்கு குடி பெயர்ந்ததன் காரணமாக இப்போது இந்த பள்ளிவாசல் உடைந்து கவனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றது.

மேலும் இது நீண்ட காலமாக இயங்கி வந்த பள்ளிவாயல் என்பதும் குறிப்பிடத்தக்கது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 MARCH 08 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# முஸ்லிம் தீவிரப்போக்கை முளையிலே கிள்ளி எறிய வேண்டும்

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சில பிரதேசங்களில் அடிப்படை வாத குழு ஒன்று இயங்குவது பற்றி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறியுள்ளதாக பிரபல ஆங்கில பத்திரிகையில் வெளியான செய்தி முஸ்லிம்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. சூப்பர் முஸ்லிம் என்ற பெயரில் இயங்கும் படித்த முஸ்லிம் செயற்பாட்டாளர்களால் இயக்கப்படும் இந்த அமைப்பு குறித்து புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக கண்காணித்து வருவதாக பாதுகாப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் தடை செய்யப்பட்ட 13 முஸ்லிம் அமைப்புகளில் ஒன்றான சூப்பர் முஸ்லிம் என்ற அமைப்பே தீவிர சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம்கள் புனித நோன்பினை நோற்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் இந்த நிலையிலே இவ்வாறான ஒரு அமைப்பு பற்றி அரசின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் இந்த செய்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த அமைப்பு தொடர்பாக அரசாங்கம் வெறுமனே அறிக்கைகளை மட்டும் விடாது இந்த அமைப்புடன் தொடர்பு உள்ளவர்களை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி இந்த இயக்கம் பற்றிய தகவல்களை வெளியிட வேண்டுமென முஸ்லிம் அரசியல் தலைமைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சூப்பர் முஸ்லிம் அமைப்பின் நோக்கம் என்ன? இவர்களது செயற்பாடு சமய அடிப்படையிலானதா? அல்லது சமையல் அடிப்படையில் மட்டுமானதா? என்பது பற்றி தேடிப் பார்க்க வேண்டும். இலங்கை வாழ் முஸ்லிம்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அடிப்படைவாத சிந்தனைகளை ஆதரிப்பவர்கள் அல்ல. நாட்டில் வாழும் சகல இன மக்களுடனும் இணைந்து ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றார்கள். வரலாறு முழுவதும் இதற்கு சான்று பகர்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன் ஸஹ்ரான் குழுவினரின் அச்சுறுத்தல் பற்றி முஸ்லிம்கள் தரப்பில் புகார்கள் தெரிவிக்கப்பட்ட போதும் பாதுகாப்புத் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க தவறியதனால் முஸ்லிம் சமூகத்தின் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இதனால் நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். பல வருடங்கள் அவர்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலை மீண்டும் ஏற்பட இடமளிக்கக் கூடாது. கிழக்கிலங்கை வாழ் சூப்பர் முஸ்லிம் இயக்கம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களது நோக்கம் என்ன என்பதை கண்டறிய வேண்டும். இவர்களது பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் உள்ளதா என்பது பற்றியும் தேடிப் பார்க்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் தடை செய்யப்பட்ட 13 முஸ்லிம் அமைப்புகளில் ஒன்றாக இந்த அமைப்பு இருப்பதனால் இந்த அமைப்பு குறித்து பாதுகாப்பு தரப்பு ஏன் மென்மையான போக்கினை கடைப்பிடிக்கின்றது என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இந்த அமைப்பின் பிரதானிகள் பகிரங்கமாக தமது இயக்கப் பணிகளை முன்னெடுத்து வருவதாக கிழக்கிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்படி இருக்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்த அமைப்பு பற்றி கருத்து வெளியிட்டதன் பின்னணி என்ன என்பது பற்றியும் கேள்வி எழுப்பப்படுகின்றது. இவ்வாறான அமைப்புகள் குறித்து முஸ்லிம் சமூகம் விழிப்பாக இருத்தல் வேண்டும். பெற்றோர்கள் தன் பிள்ளைகள் குறித்து கண்காணிப்புடன் இருக்க வேண்டியது முக்கியமானதாகும். புதுப்புது சிந்தனைகளை அறிமுகப்படுத்தும் குழுக்கள் தொடர்பாக சமூகம் விழிப்புடனே இருக்க வேண்டும். பாராளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் இந்த அமைப்பு பற்றி உண்மையை அறிந்து மக்களுக்கு தெளிவு ஊட்ட வேண்டும். பாதுகாப்பு தரப்புடன் கலந்துரையாடி அகில இலங்கை ஜம்யத்துல் உலமா உட்பட முஸ்லிம் சிவில் அமைப்புகள் இவ்வாறான தீவிரப் போக்குடையவர்களின் செயற்பாடுகளின் ஆபத்து பற்றி அறிவூட்ட வேண்டும்.

இன்று இந்த நாட்டிலே புதிய அரசின் கீழ் முஸ்லிம்கள் பற்றிய நல்லெண்ணங்கள் ஏற்பட்டிருக்கின்ற இந்த வேளையில், இப்படியானதொரு இயக்கம் இருப்பதாக வெளியிட்ட தகவலானது, சில சக்திகளுக்கு இனவாதத்தை கக்குவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. இவ்வளவு காலமாக முஸ்லிம் சமூகம் பற்றி இனவாத ரீதியாக பேசாது அமைதி காத்த பலரும் இன்று ஊடகங்கள் முன்வந்து முஸ்லிம்களைப் பற்றி ஒவ்வொரு கதைகளை சொல்லி வருகின்றார்கள். ஆகவே இது தொடர்பாக அரசாங்கம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். ஏனெனில் தொங்குவதற்கு கயிறு இல்லாமல் இருக்கின்ற சில சக்திகள் ஏதாவது ஒன்றை பிடித்து செயற்படுவதற்கு முற்படுகின்றார்கள். கடந்த சில தினங்களாக ஊடகங்களை பார்க்கின்ற போது, இது தொடர்பாக கருத்து தெரிவிக்கின்ற பல தீவிர செயற்பாட்டாளர்கள் முஸ்லிம் சமூகத்தை முழுமையாக குற்றம் சுமத்தி வருவதை காண முடிகிறது. எனவே முஸ்லிம் சமூகம் இந்த விடயத்தை மிக நிதானமாக கையாள்வது அவசியம் ஆகும். இது சம்பந்தமாக அரசாங்கம் கடினமான நடவடிக்கைகளை எடுப்பது முக்கியம். ஏனென்றால் முஸ்லிம் சமூகம் இப்படி ஒரு செயல்பாட்டை அதாவது முஸ்லிம்கள் மத்தியில் கடும் தீவிர போக்கு வளர்வதை முஸ்லிம் சமூகம் வரவேற்கவில்லை. இந்த நிலையில் இந்த பிரச்சினை பற்றி முஸ்லிம் சமூகம் தங்களுக்குள் பேசி இதனை முளையிலேயே கிள்ளி எறிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவையேற்படின் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து, அவர்களது தொடர்புகளை வெளிப்படுத்தி இவ்வாறான தீவிர அமைப்புகள் இயங்க முற்படுவதனை தடுக்க அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## உள்ளூராட்சி தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றங்களிலும் தனித்துப் போட்டியிடும் முடிவெடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய மாவட்ட மட்டத்தில் கட்சிப் போராளிகளைச் சந்தித்து வேட்பாளர் தேர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தனித்துப் போட்டியிடுவதன் மூலம் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதி உறுப்பினர்களை வென்றெடுப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மனோ கணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்கு முன்னணியும் தத்தமது பிரதேசங்களில் தனித்துப் போட்டியிடுவதற்கான ஆரம்ப முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளார். கட்சி முக்கியஸ்தர்களுடன் இது குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாகவும், விரைவில் இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுமென்றும் குறிப்பிட்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி இது தொடர்பாக கட்சி மட்டத்தில் பேச்சுக்களை முன்னெடுத்து வருவதாகவும் விரைவில் இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென்றும் கட்சி முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார்.

# கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகாவில் புதுக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா









கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தின் குவைத் கட்டிட நிர்மாணப் பணியின் ஆரம்ப நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடந்த டிசம்பர் மாதம் பாடசாலை நலன்புரிக் குழுவின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட கிடுகு விற்பனை மூலம் திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு இக் கட்டிடப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது கம்பஹா களனி வலய தமிழ் மொழி மூல பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.டி.எம்.தௌஸீர், அல்ஹிமா நிறுவன பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருள்ளாஹ் ஆகியோர் அடிக்கல் நடுவதையும் அருகில் அதிபர் எம்.எம்.சர்ஜூன் உட்பட கம்பஹா கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், கிடுகுக்குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் உட்ளிட்ட பலரையும் காணலாம்.



# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

**முஸ்லிமாக அன்றி மரணிக்க வேண்டாம்.**

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்பட வேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் இறந்துவிட வேண்டாம். (3:102)

நரக கிடங்கின் அருகில்மேலும் நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய (வேதம் என்னும்) கயிற்றை பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்து விட வேண்டாம். உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் (ஒருவருக் கொருவர்) எதிரிகளாகப் பிரிந்து இருந்த சமயத்தில் உங்கள் உள்ளங்களுக்குள் (இஸ்லாத்தின் மூலம்) அன்பை ஊட்டி ஒன்று சேர்த்தான். ஆகவே அருளால் நீங்கள் சகோதரர்கள் ஆகி விட்டீர்கள் (அதற்கு முன்னர்) நீங்கள் நரக நெருப்புக் கிடங்கிற்கு அருகில் இருந்தீர்கள். அதில் இருந்தும் அவன் உங்களைக் காப்பாற்றிக் கொண்டான். நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்திக் காண்பிக்கிறான் (3:103)

**வெற்றியாளர்கள்**

(நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் (மனிதர்களை) சிறந்ததின் பக்கம் அழைத்து நன்மையைச் செய்யும்படி ஏவி பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கவும். இத்தகையவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள் (3:104)

எவர்கள் தங்களிடம் அல்லாஹ்வின் தெளிவான வசனங்கள் வந்த பின்னரும் தங்களுக்குள் (கருத்து) வேறுபட்டு பிரிந்து போனார்களோ அவர்களைப் போல நீங்களும் ஆகிவிட வேண்டாம் இத் தகையவர்களுக்கே (மறுமையில்) மகத்தான வேதனையும் உண்டு (3:105)

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள்தான் மனிதர்களில் தோன்றிய வகுப்பார்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள். (ஏனென்றால்) நீங்கள் (மனிதர்களை) நன்மையான காரியங்களைச் (செய்யும்படி) ஏவி, பாவமான காரியங்களிலிருந்து (அவர்களை) விலக்கி மெய்யாகவே அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கின்றீர்கள். (இவ்வாறே) வேதத்தையுடையவர்களும் நம்பிக்கை கொண்டால் (அது) அவர்களுக்குத்தான் மிக நன்று. நம்பிக்கை கொண்டவர்களும் அவர்களில் இருந்த போதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் (நிராகரிக்கும்) பாவிகளாகவே உள்ளனர் (3:110)

அன்றி, அவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டு (மனிதர்களுக்கு) நன்மையான காரியங்களை ஏவி, தீமையான காரியங்களிலிருந்து தடுத்து, நன்மையான காரியங்களைச் செய்ய (விரைந்தும்) செல்கின்றனர். இத்தகையவர்களும் நல்லவர்களில் உள்ளவர்களே (3:114)

**வட்டி ஒருக்கொடுமை**

நம்பிக்கையாளர்களே! (அசலுக்கு அதிகமாகவும், வட்டிக்கு வட்டி போட்டும்) இரட்டித்துக் கொண்டே அதிகரிக்கக்கூடிய வட்டியை (வாங்கித்) தின்னாதீர்கள் . அல்லாஹ்வுக்குப் பயந்து (இதனைத் தவிர்த்துக் கொண்டால்) நீங்கள் வெற்றியடைவீர்கள் (3:130)

(நரக) நெருப்பிற்குப் பயந்து கொள்ளுங்கள். அது (இறைவனுடைய இக்கட்டளையை) நிராகரிப்பவர்களுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளது (3:131)

அல்லாஹ்வின் அன்பை அடைய அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் கீழ்படிந்து நடங்கள். அதனால் நீங்கள் (அல்லாஹ்வின்) அன்பை அடையலாம் (3:132)

*வாசகர்களே!*

இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.
உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யூசுபிற்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பணிப்பாளர் நாயகம் அளித்த வாக்குறுதி மீறப்பட்டது குறித்து பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. புனித ரமழான் மாதத்தில் இரவு ஏழு மணி முதல் எட்டு மணி வரை முஸ்லிம் நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவது நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இம்முறை திடீரென கடந்த நான்காம் திகதி முதல் 20 நிமிடங்கள் குறைக்கப்பட்டு விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுவது குறித்து முஸ்லிம் தரப்பில் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுபின் கவனத்திற்கு கொண்டு வந்ததனையடுத்து ஆளுநர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பணிப்பாளர் நாயகம் தமிந்த குமாரவுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு தெரிவித்த போது வழமை போன்று நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் என தெரிவித்தார். ஆளுனருக்கும் அதேபோல முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருக்கும் இந்த வாக்குறுதி தெரிவிக்கப்பட்டது. ஆளுநருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாதது ஏன் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இதுகுறித்து பணிப்பாளர் நாயகம் ஆளுநருக்கு குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளார். முஸ்லிம் மீடியா போரத்தின் நேரமாற்ற கோரிக்கையை நிறைவேற்ற முடியாததை குறித்து நான் ஆழ்ந்த கவலைப்படுகின்றேன். பின்வரும் காரணிகளினால் மீடியாவின் போரத்தின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கின்றேன். இந்த முஸ்லிம் நிகழ்ச்சி தமிழ் சேவையில் இரவு 8 மணி முதல் 9 மணி வரை ஒலிபரப்பப்படுகின்றது.

முஸ்லிம் சமூகத்தின் வேண்டுகோளின் பெயரில் 7 மணி முதல் 8 மணி வரை அது ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழமையாக செய்தி அறிக்கை 6 மணிக்கு ஒலிபரப்பப்படுகின்றது. பள்ளிவாசல்களின் வேண்டுகோளின் பேரில் இப்தார் நிகழ்ச்சி அந்த நேரத்தில் ஒலிபரப்பப்படுவதனால் செய்தி அறிக்கை ஏழு மணிக்கு ஒலிபரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் 7 மணி முதல் 7.10 வரை செய்தி அறிக்கை ஒளிபரப்பாகின்றது. எனவே ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு இரவு 7 மணி முதல் 7.10 வரையான நேரத்தை முஸ்லிம்களுக்கு ஒதுக்க முடியாது. பள்ளிவாசலில் வேண்டுகோளின் படியே இந்த மாற்றம் இப்தார் நிகழ்ச்சிக்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த மாற்றங்களை அறிமுகப்படுத்த முடியாத நிலையில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் இருக்கின்றது. அடுத்த முறை இந்த மாற்றங்களை மேற்கொள்ளும் சாத்தியப்பாடுகள் பற்றி கவனத்தில் கொள்வோம். இது குறித்து ஆளுநருக்கு முஸ்லிம் மீடியா போரத்திற்கும் ஏற்பட்ட அசௌகரியத்திற்கு கவலை தெரிவிக்கின்றேன் என்று பணிப்பாளர் நாயகம் அந்த குறிப்பில் தெரிவித்துள்ளார். அதேநேரம் முஸ்லிம் மீடியா போரம் இதுகுறித்து அமைச்சர் விமல் ரத்னாயக்க வின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. சில தினங்களுக்கு முன் கொழும்பில் இடம்பெற்ற சவூதி அரேபியாவின் இப்தார் நிகழ்வின் போது முஸ்லிம் மீடியா போரத்தின் பிரதிநிதிகள் இது குறித்து ஊடக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி அளித்திருந்தார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவின் குடியுரிமையை இரத்து செய்து, அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அல்ஜஷீராவுக்கு கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதா? எனக் கேள்வி எழுப்பியதன் ஊடாக, அந்த அறிக்கை அரச கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படாத ஒன்று எனக் குறிப்பிடுவதாக துமிந்த நாகமுவ கூறியுள்ளார்.

ஜனாதிபதியினால் குறித்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாகவும், அவ்வாறானால் அப்போதைய ஜனாதிபதி எதற்காக அதன் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணத்தைப் பாதுகாப்பதற்காகவே அவர் அவ்வாறு செய்தார் என குற்றம் சுமத்திய அவர் படலந்த ஆணைக்குழு அறிக்கையை தாக்கல் செய்வது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் வெளிநாட்டு ஊடகங்களுடனான கலந்துரையாடலில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் அதனால் ஜே.வி.பி பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அரசாங்கத்தின் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்து, அந்த பணியை அது நிறைவேற்றுமா என்பதைப் பார்க்கிறேன் எனத் தெரிவித்தார்.






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# ரமலானில் இஸ்ரேல் குண்டு வீச்சு!

# அமெரிக்காவுக்கு அரபுகள் உறுதியான அறிவிப்பு!

இஸ்ரேலுக்கும் – ஹமாஸுக்கும் நடந்து வந்தப் போர் நிறுத்தப்பட்டது. இது தொடர்பாக முடிவு செய்யப்பட்ட போர் நிறுத்த முதல் கட்ட ஒப்பந்தம் கடந்த 1ந் தேதிக்கு பிறகு ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் முடிந்தது.

இந்த ஒப்பந்தம் முடிவதற்கு முன்பே இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஏப்ரல் நடுப்பகுதியில் யூதர்களின் “பாஸ்ஓவர்“ விடுமுறை வருவதால் அதுவரை போர் நிறுத்த ஒப்பந்தத்தை நீடிப்பதாக இஸ்ரேல் அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு அமெரிக்காவின் ஆலோசனைப் படியே நடந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், பேச்சுவார்த்தைகள் பயனற்றவை என்று நம்பினால், முதல் கட்டத்திற்குப் பிறகு போரை மீண்டும் தொடங்கலாம் என்றும் இஸ்ரேல் எச்சரித்திருக்கிறது.

இந்த நிலையில், காஸாவில் உள்ள முஸ்லிம்கள் புனித ரமலான் மாதத்தில் முதல் நோன்பை துறந்த சில மணி நேரத்தில், “காஸாவிற்குள் செல்லும் உதவிகள், நிவாரணங்கள் உடனடியாக நிறுத்தப்படுகிறது“ என இஸ்ரேல் அறிவித்திருக்கிறது. பைடன் நிர்வாகத்தின் போது காஸாவிற்குள் கூடுதல் உதவிகளை அனுமதிக்க இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்த அமெரிக்கா, இல்லையென்றால் ஆயுதம் வழங்கப்படுவதை கட்டுப்படுத்துவோம் எனவும் அச்சுறுத்தியது. ஆனால், இப்போது அதே அமெரிக்காவின் ஆலோசனைப் படியே போர் நிறுத்த ஒப்பந்தம் முதல் உணவு, உதவிக் கட்டுப்பாடு வரை காஸாவுக்கான அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது இஸ்ரேல்.

அதனால், காஸாவின் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு பசி ஒரு பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. “இஸ்ரேல் பட்டினியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறது” என உலக நாடுகள் குற்றம்சாட்டுகின்றன. இஸ்ரேலின் இந்த திடீர் அறிவிப்பால் காஸாவில் இருந்த பழங்கள், பொருள்களின் விலை மூன்று மடங்கு அதிகரித்திருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

”இஸ்ரேலின் இந்த முடிவு சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு முற்றிலும் எதிரான நடவடிக்கை. உயிர்காக்கும் முக்கிய உதவிகளை வழங்க எங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்” என்று ஐ.நா. மனிதாபிமானத் தலைவர் டாம் பிளெட்சர் தெரிவித்திருக்கிறார். இஸ்ரேலின் அறிவிப்புக்கு பிறகு, ஐந்து அரசு சாரா குழுக்கள் இஸ்ரேலின் உச்ச நீதிமன்றத்திடம், காஸாவிற்குள் உதவிகள் கொண்டுசெல்லப்படுவதை தடுக்கும் உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடர்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீனத்தின் காஸா முனையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையே தொடங்கிய போர் ஓராண்டை கடந்து நீடித்து வந்தது. அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து மத்தியஸ்தம் செய்ததைத் தொடாந்து கடந்த ஜனவரியில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக இஸ்ரேல்–ஹமாஸ் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மூன்று கட்டமாகச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

முதல்கட்டத்தில் 42 நாள்களுக்கு போர் நிறுத்தம் மேற்கொள்ளப் பட்டது. அத்துடன் இஸ்ரேலில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட பிணைக் கைதிகளைப் படிப்படியாக ஹமாஸ் அமைப்பும், தம்மிடம் உள்ள பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேலும் விடுவித்தன. மேலும், காஸாவில் போரால் இடம்பெயர்ந்த மக்கள், அங்கு தாங்கள் வசித்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

முதல்கட்டம் தொடங்கி 16 நாள்களுக்குப் பிறகு, ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு, நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இரண்டாம் கட்டத்தில் பாலஸ்தீன கைதிகளை கூடுதலாக இஸ்ரேலும், எஞ்சிய பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பும் விடுவித்து, காஸாவில் இருந்து இஸ்ரேல் படைகளை முழுமையாகத் திரும்பப் பெற முடிவு செய்யப்பட்டது.

ஒப்பந்தத்தின் முதல்கட்டத்தின்படி 42 நாள் தற்காலிக போர் நிறுத்தம் சனிக்கிழமை நிறைவடைந்தது. இந்தக் கட்டத்தில் 25 இஸ்ரேல் பிணைக் கைதிகளையும், 8 பேரின் சடலங்களையும் அந்நாட்டிடம் ஹமாஸ் ஒப்படைத்தது. இதேபோல இஸ்ரேலும் சுமார் 2,000 பாலஸ்தீன கைதிகளை விடுவித்தது. எனினும் ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டம் குறித்து இருதரப்பினரும் இதுவரை பேச்சுவார்த்தையை தொடங்கவில்லை.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கான சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் பரிந்துரையின்படி, தற்காலிக போர் நிறுத்தத்தை நீட்டிக்க வேண்டும் என்று இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாமியர்களின் ரமலான் பண்டிகை, யூதர்களின் பெசாக் விழா காலங்களில் தற்காலிக போர் நிறுத்தம் அமலில் இருக்கும் வகையில், போர் நிறுத்தத்தை நீட்டிக்க வேண்டும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ரமலான் நோன்பு காலம் மார்ச் இறுதி வரை நீடிக்கும் நிலையில், யூதர்களின் பெசாக் விழா ஏப்.19–ஆம் தேதி நிறைவடைகிறது.

விட்காஃப் பரிந்துரையின்படி, ஹமாஸ 'டம் எஞ்சியுள்ள பிணைக் கைதிகளில் பாதி போர், போர் நிறுத்த நீட்டிப்பின் முதல் நாளிலும், போர் நிறுத்த நீட்டிப்பு நிறைவடையும்போது மீதமுள்ள பிணைக் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக போர் நிறுத்த நீட்டிப்பு பரிந்துரையை ஹமாஸ் அமைப்பு ஏற்க மறுத்துள்ளது. ஏற்கெனவே திட்டமிட்டதுபோல ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அந்தப் பரிந்துரையை ஹமாஸ் ஏற்காததால், ஐ.நா. சார்பிலும், எகிப்து, ஜோர்டான் போன்ற நாடுகளில் இருந்தும் மனிதாபிமான அடிப்படையில் காஸாவுக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமை தடுத்து நிறுத்தியது.

அந்தப் பரிந்துரையை ஏற்காவிட்டால், கூடுதல் பின்விளைவுகளை ஹமாஸ் அமைப்பு சந்திக்க நேரிடும் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இது தொடர்பாக இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறுகையில், “மனிதாபிமான அடிப்படையில் அனுப்பப்படும் பொருள்களை நிறுத்தும் முடிவு, அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது“ என்றார்.

இதுதொடர்பாக ஹமாஸ் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், “மனிதாபிமான அடிப்படையில் அனுப்பப்படும் பொருள்களை நிறுத்தி மட்டமாக மிரட்டல் விடுக்கப்படுகிறது. இதில் மத்தியஸ்தர்கள் தலையிட வேண்டும்“ என்றார்.

இதுகுறித்து எகிப்து வெளியுறவு அமைச்சர் பதர் அப்துல்லாட்டி கூறுகையில், “இஸ்ரேல் பட்டினியை ஆயுதமாக்குகிறது. போர் நிறுத்தத்தின் இரண்டாம் கட்டம் உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும்“ என்றார்.

போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவராமல் எஞ்சிய பிணைக் கைதிகளை விடுவிக்கும் புதிய பரிந்துரையை ஹமாஸ் மற்றும் எகிப்து ஏற்காது என்று எகிப்து அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் நிலையில் குற்றச்சாட்டுகளை இஸ்ரேல் மறுத்துள்ளது. போதுமான உதவிகளை அனுமதித்துள்ளதாகவும், பற்றாக்குறைக்கு ஐ.நா. அதை விநியோகிக்க இயலாமையே காரணம் என்றும் அது கூறுகிறது. ஹமாஸ் உதவிகளை திருப்பி அனுப்புவதாகவும் அது குற்றம் சாட்டியது – நெதன்யாகு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் மீண்டும் கூறிய குற்றச்சாட்டை இது குறிக்கிறது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் முன்னாள் தலைவரான கென்னத் ரோத், இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பு சக்தியாக இருப்பதால், ஜெனீவா உடன்படிக்கைகளின் கீழ் மனிதாபிமான உதவிகளை எளிதாக்குவது ”முழுமையான கடமை” என்று கூறினார், மேலும் இஸ்ரேலின் முடிவை ஐ.சி.சி வாரண்டிற்கு வழிவகுத்த ”போர்–குற்ற பட்டினி உத்தியின் மறுதொடக்கம்” என்றும் அழைத்தார்.

அதேநேரத்தில் இஸ்ரேலின் தாக்குதலில் 48,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. கொல்லப்பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று அது கூறுகிறது. இறந்தவர்களில் எத்தனை பேர் போராளிகள் என்பதை அது குறிப்பிடவில்லை.

இஸ்ரேலிய குண்டுவீச்சு காசாவின் பெரும் பகுதிகளைத் தாக்கி இடிபாடுகளாக மாற்றியது, மேலும் மக்கள் தொகையில் 90 சதவீதத்தினர் இடம்பெயர்ந்தனர். இதற்கிடையில் ரஃபா பகுதியில் 10 க்கு மேற்பட்ட வான்வெளி தாக்குதலை ரமாலான் காலத்தில் நடத்தி பலர் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் மோசமான நிலையில் காயம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் வறுமை, வேலையின்மை, உறவுகளை இழந்த கொடுமை இந்த சூழலில் கூட அவர்கள் புனித ரமலான் நோன்பு காலத்தில் இஃப்தார் நிகழ்ச்சியை இடிபாடுகள் இடையே நடத்திய நிகழ்வுகளை கண்ட போது உலகமே ஒரு கனம் வியந்த போனதாக நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எப்படி இது போன்ற மனம் அந்த மக்களுக்கு வந்தது என்பதை அல் ஜெஸிரா தொலைக்காட்சி நிருபர் ஒருவர் காசாவில் வாழும் பொதுமக்களை பேட்டி கண்டார். அதில் கலந்து கொண்ட பாலஸ்தீனர் நாங்கள் எல்லாவற்றையும் இழந்து விட்ட நிலையில் கூட இறைநம்பிக்கையை ஒரு போதும் இழக்க மாட்டோம் என்று கூறியது மிகவும் வலிமையான செய்தி என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. உறவுகள், வீடுகள், முழுமையான வாழ்வாதாரத்தை இழந்து போன நிலையில் இறைநம்பிக்கையை நாங்கள் ஒரு போதும் இழக்க மாட்டோம் என்று கூறியது அறிவுடைய சமூகத்திற்கு மிகப் பெரிய அளவில் ஆன அத்தாட்சி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இஸ்ரேலிய ராணுவ தலைமை ஒரு செய்தியை தெரிவித்து வருகிறது. அந்த செய்தியில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எங்களுக்கு தந்த யோசனையின் அடிப்படையில் தான் நாங்கள் இது போன்ற செயலை செய்கிறோம் என்று தெளிவாக கோடிட்டுக் காட்டி உள்ளதன் வாயிலாக அமெரிக்கா மற்றும் யூத சியோனிச வலதுசாரி சித்தாந்தம் இணைந்து தான் இந்த கொடூரமான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதையும் காண கூடியதாக இருக்கிறது.

அமெரிக்காவின் கடும் போக்கு வாதத்தை வேறு வடிவில் அவர்கள் யூதர்கள் மூலம் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.அதற்கு காரணம் மத்திய கிழக்கு நாடுகளில் ஒரு வித அமைதியற்ற கள சூழலை உருவாக்கி வளர்ச்சியை தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இதன் மூலம் நிரந்தரமான ராணுவ மண்டலமாக அந்த பகுதியை வைத்து கொள்ளும் போது வரும் காலங்களில் ஏராளமான பேரழிவு ஆயுதங்களை சப்ளை செய்யும் நிலையை உருவாக்கிட அவர்கள் தொடர்ந்து முயன்று அதில் ஓரளவு வெற்றி பெற்று இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. அதேநேரத்தில் காசாவை பேரழிவு மண்டலமாக ஆககுவதன் மூலம் உளவியல் ரீதியான பாதிப்பை மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் உருவாக்கிட முடியும் என்பதே அவர்களின் உறுதியான செயல் திட்டமாக இருந்து வருகிறது .

தற்போதைய நிலையில் அமெரிக்கா எடுத்து வரும் கடும் போக்கு அரசியல் தத்துவத்தை அமல்படுத்த அவர்கள் யூதர்கள் மற்றும் யூத சியோனிச ராணுவ தலைமையை பயன்படுத்தி வருகின்றனர். இதனை வெளிப்படையாக யூத வலதுசாரி அமைச்சர்கள் புகழாரம் சூட்டி பேசி வருவதைக் காணும்போது இது எல்லையற்ற மிருகத்தனமான போக்கினை உறுதிபடுத்துவதாகவே அமைந்துள்ளது.

இதற்கிடையில் அரபுகள் அனைவரும் ஒரே குரலில் இந்த அநீதியை எதிர்த்து குரல் கொடுக்க முன்வருவது அந்த மக்களுக்கு மிகப் பெரிய அளவில் ஆன மன ஆறுதலை நிச்சயமாக ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதுவும் சவூதி அரேபியா கிரவுன் பிரின்ஸ் முஹம்மது பின் சல்மான் இந்த அறிவிப்பின் தலைவராக செயற்பட்டார். எகிப்து மிகவும் நேர்த்தியாக இந்த திட்டத்தை வடிவமைப்பு செய்து இருந்தது மிகவும் முக்கியமானது.

அரபுகள் கூட்டமைப்பு தற்போது கூடிய கூட்டத்தின் வாயிலாக அமெரிக்கா அதிபர் மற்றும் பெஞ்சமின் நிதான்யாகுவிற்கு ஒரு செய்தியை தெளிவாக தெரியப்படுத்தி விட்டது. பாலஸ்தீன பிரதேசத்தில் இருந்து மக்கள் ஒரு போதும் வெளியேற மாட்டார்கள் என்பதே அந்த செய்தியாகும்.

காசாவை மறு புணரமைப்பு செய்யும் நோக்கில் அதாவது 35 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டதாக அறிவிப்பு செய்துள்ளது. பல கட்டங்களில் தொடரும் இந்த பணிகளுக்கு 55 பில்லியன் டாலர்கள் வரை செலவு பிடிக்கும் நிலையில் இந்த பணிகள் 2027 வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அமெரிக்காவின் அறிவிப்பு செல்லாகாசாக மாறி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.உண்மையில் மிகவும் சிரமத்தில் வாழும் மக்களுக்கு இது மிகப் பெரிய அளவில் ஆன ஆறுதலை நிச்சயமாக தரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இந்த அரபு தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அமெரிக்கா தேசத்திற்கு எதிரான ஒற்றுமை பிரகடனம் வரலாற்றில் பின்னால் ஒரு வேளை மிகப் பெரிய அளவில் ஆன பேச்சு பொருளாக மாறி விடும் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

புனித ரமலான் மாதத்தில் சொந்த மக்களை அவர்களின் சொந்த நிலத்தில் இருந்து வெளியேற்றி அந்த பகுதியை ஆக்கிரமித்து கொள்ள இந்த பாசிஸ்டுகள் முயற்சி செய்து வருவதை நாம் காண முடிகிறது. அதற்கு அவர்கள் எதனையும் தங்களால் சாதிக்க முடியும் என்பதற்கு பேரழிவு ஆயுதங்களை மட்டுமே முழுமையாக நம்புகின்றனர்.அதன் தொடர்ச்சியாக அமெரிக்கா மீண்டும் எட்டு பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு ஆயுத சப்ளை செய்ய முன் வருவதாக அறிவிப்பு செய்துள்ளது.

எல்லையில்லாத அநீதி... இதற்கு தீர்வு கிடையாத என்று முஸ்லிம் உலகத்தை தாண்டி மனித நேய பாவனையாளர்களை மிகுந்த கவலைக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இந்த மனிதர்களில் பெரும்பாலான மக்கள் அமெரிக்காவில் வாழும் யூதர்கள் ஆக இருந்து வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆக மனித நேயம் அனைத்து மதங்களுக்கும் உரித்தான ஒன்றாக இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நிச்சயமாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனின் இழப்பு மற்றும் கண்ணீருக்கு பதில் கண்டிப்பாக கிடைத்தே தீரும். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

அந்த தீர்வுக்கு மிகவும் முக்கியமான காரணியாக இருப்பது பொறுமை மற்றுமே. அதைத் தான் பாலஸ்தீன மக்கள் தினம், தினம் நடைமுறை படுத்தி வருவதை காண முடிகிறது. அப்படியெனில், அந்த மக்களுக்கான மகிழ்ச்சியுடையே எதிர் காலம் விரைவில் வந்தே தீரும் என்பதுடன் இந்த கட்டுரைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம்.

# வேலை நிறுத்தங்கள் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு அச்சுறுத்தல்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் 2025.03.03 ஆம் திகதியில் இருந்து எரிபொருள் விநியோகத்தை நாடுபூராகவும் நிறுத்துவதாக அறிவித்து வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள தயாராகிய நிலையில் அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட முன்வந்த எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும் இடையில் 2025.03.02 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பொன்றை தொடர்ந்து இவ்வாறு வேலை நிறுத்தத்தை கைவிடுவதாக அறிவித்தனர்.

அதே நேரம் 2025.03.03 ஆம் திகதி எரிபொருள் துறை அமைச்சர் குமார ஜெயகொடியுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் 2025.02.28 ஆம் திகதி இவ்வாறான வேலை நிறுத்தம் பற்றிய அறிவித்தல் வெளியாகியவுடன் நாடு பூராவும் உள்ள எரிபொருள் விநியோக நிலையங்கள் முன்னால் பெரியளவிலான கியூ வரிசையை காண முடிந்தது. காரணம் மீண்டும் ஒரு முறை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்ச நிலையாகும். சாதாரணமாக வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புபவர்கள் மேலதிகமாக கேன்களுக்கும் எரிபொருளை கொள்வனவு செய்தனர். எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு எரிபொருள் விற்பனை விலையில் வழங்கப்படுகின்ற 03 வீத கழிவுத் தொகையை மார்ச் முதலாம் திகதியில் இருந்து எரிபொருள் செலவுத் தொகையில் கணக்கெடுத்து பெற்றுக்கொடுப்பதாக எரிபொருள் கூட்டுத்தாபனம் அண்மையில் அறிவித்திருந்தது. இந்த அறிவித்தலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலே எரிபொருள் விநியோகஸ்தர்கள் இவ்வாறான வேலை நிறுத்த போராட்டத்தில் குதிப்பதாக அறிவித்திருந்தனர்.

ஆனாலும் இந்த வேலை நிறுத்தத்திற்கும் குறித்த அறிவித்தலுக்கும் இடையில் தவறான புரிதல் ஒன்று ஏற்பட்டிருந்ததை எரிபொருள் விநியோகஸ்தர்கள் தவறாக விளங்கிக் கொண்டதாலே இத்தகைய குழப்ப நிலை உருவாகியதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவொன்றுக்கு அமைவாகவே எரிபொருள் விநியோக திணைக்களம் இந்த அறிவித்தலை செய்திருப்பதால் குறித்த விடயம் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை மூலம் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதாக அறிவித்து 2025.03.04 ஆம் திகதியில் இருந்து எத்தகைய இடையூறுகளும் இன்றி எரிபொருள் விநியோகத்தை நடத்த உத்தரவாதம் வழங்கினர்.

அதே நேரம் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது இவ்வாறான 03 வீத கழிவுத் தொகையொன்றை வழங்குவது அநீதியான செயலாகும். இதன் மூலம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதி அநியாயமான முறையில் செலவு செய்யப்படுகின்றது, ஏற்கனவே எரிபொருளை கொள்வனவு செய்யும் பொது இவர்களுக்கு கழிவு விலையில் அதுவும் மொத்த விற்பனை விலையில் கொடுத்துவிட்டு பின்னர் 03 வீத கமிசன் வழங்கும் நடைமுறை பொருத்தமற்றது என்பதாகும். அதனால் இத்தகைய மேலதிக 03 வீத கமிசன் அவசியம் இல்லை என்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. எவ்வாறாக இருந்தாலும் நாடளாவிய ரீதியில் பாரிய பீதிக்கு மத்தியில் எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கான வேலை நிறுத்தம் புஸ்வானமாகிப் போன கதையாக மாறியது.

அவ்வாறே இம்முறை 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு என்பவற்றிற்காக போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற காரணங்களை முன்வைத்து நாடளாவிய ரீதியில் சுகாதாரத்துறை ஊழியர்கள் 2025 மார்ச் 05 ஆம் 06 ஆம் திகதிகளில் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடத்துவதாக அறிவித்திருந்தனர். ஆனாலும் அந்த வேலை நிறுத்தத்தையும் கைவிடுவதாக 2025.03.04 ஆம் திகதி அறிவித்தனர்.

சுகாதாரத்துறை தொழில் நிபுணர்களுக்கான சம்பள மேலதிக கொடுப்பனவு தொடர்பாக புதிய சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது. ஏனைய அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் முன்னைய அலவன்ஸ்கள் இணைக்கப் பட்டுள்ளமையும் நிபுணர்களுக்கான அநீதியும் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவுடன் கலந்துரையாடலுக்கான நேரம் ஒதுக்கித் தராவிட்டால் 06 ஆம் திகதி காலை 8.00 மணியில் இருந்து தொழிற் சங்க நடவடிக்கையில் குதிப்பதென எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனாலும் 2025.03.05 ஆம் திகதி ஜனாதிபதி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மருத்துவ துறை ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வை பெற்று தருவதாக அறிவித்ததால் இவ்வாறு திட்டமிட்டிருந்த வேலை நிறுத்த போராட்டத்தை கைவிட தீர்மானித்ததாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பேச்சாளரான பாலித ராஜபக்ஷ தெரிவித்தார். வரவு செலவுத் திட்டத்தில் மும்மொழியப்பட்டுள்ள மேலதிக நேர மற்றும் லீவுக்கான கொடுப்பனவு வெட்டு தொடர்பாக எதிர்வரும் 21 ஆம் திகதி வரவு செலவுத் திட்டத்திற்கு திருத்தம் உட்படுத்துவதாக சுகாதார அமைச்சர் அறிவித்ததாகவும் பாலித ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில் கூறியுள்ளார். அதே நேரம் இந்த அறிவிப்பு தொடர்பாக மருத்துவ நிபுணர்கள் சங்க பேச்சாளர் ரவி குமுதேஷ் குறிப்பிடுகையில் இந்த அறிவிப்பு தொடர்பாக சந்தேகம் நிலவுகின்றது. அமைச்சர் தமது சங்கத்துடன் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடாத்தவில்லை. இத்தகைய வாக்குறுதிகளை பேச்சளவில் மாத்திரம் அல்லாது எழுத்து மூலமாகவும் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அவ்வாறே ஆசிரிய சங்கங்களும் வேலை நிறுத்தம் ஒன்றுக்கான திட்டமிடல்கள் முன்னெடுத்து வருவதாக அறிய முடிகின்றது. அதே நேரம் இவ்வாறான வேலைநிறுத்தங்களால் நாட்டின் பொருளாதாரம் எந்த நேரத்திலும் சீர்குலைந்து வீழ்ச்சியை நோக்கி செல்லலாம். ஆதனால் வேலை நிறுத்தங்கள் தொடர்பாக அரசாங்கம் மேலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் அறிய முடிகின்றது. ஏனெனில் இவ்வருடம் சர்வதேச நாணய நிதியத்தின் 290 கோடி அமெரிக்க டாலர் (சராசரியாக 87000 கோடி ரூபா) கடன் விடுவிப்பொன்று இடம்பெற இருப்பதால் நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பாக மேலும் அவதானத்துடன் செயற்படுகின்றது என்பதும் குறிப்பிடத்த தக்கதாகும்.

ஆனாலும் வரவு செலவுத் திட்டத்தில் சலுகைகளை குறைத்து அரச வருமானங்களை அதிகரிப்பதற்கான வழிவகைகளை முன்வைத்திருப்பது தொடர்ந்து கடன் சுமையில் இருந்து விடுபடுவதோடு அரச செலவினத்தை குறைத்து வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திலாகும். அதனால் மக்கள் பொறுமையாக இருந்து கஷ்டங்களை தாங்கிக்கொண்டு அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டும் என்று அண்மையில் ஜனாதிபதி அறிவித்திருந்தமையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.



# கிழக்கில் என்ஜியோகிராம் பரிசோதனை வசதியில்லை; மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு இந்த வசதியை பெற்றுக்கொடுங்கள்

## - சபையில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி கோரிக்கை -

கிழக்கு மாகாணத்தில் இருதய நோயாளர்கள் என்ஜியோகிராம் பரிசோதனை மேற்கொள்ள ஒரு வைத்தியசாலையில் கூட அந்த வசதி இல்லை. யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே செல்லவேண்டி இருக்கின்றனர். அதனால் இது தொடர்பில் கவனம் செலுத்தி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இந்த வசதியை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்,

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (6) இடம்பெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தில் இருதய நோயாளர்கள் அதிகமாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் அதுதொடர்பான பரிசோதனை செய்வதற்கு கிழக்கு மாகாணத்தில் அரச வைத்தியசாலைகள் எதிலும் அந்த வசதிகள் இல்லை. கிழக்கில் இருக்கும் மிகப்பெரிய வைத்தியசாலையான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கூட அந்த வசதி இல்லை. கிழக்கு மாகாணத்தில் இருக்கும் இருதய நோயாளர்கள் இந்த பரிசோதனையை மேற்கொள்ள யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர். இதனால் யாழ்ப்பாண வைத்தியசாலை



ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு இருதய நோயாளர்களுக்கும் இந்த பரிசோதனையை மேற்கொள்ள இருப்பதால் ஒரு மாதத்துக்கு 8 பேருக்கே அவர்கள் பரிசோதனைக்கு அனுமதி வழங்குகிறார்கள்.

இதன்காரணமாக ஆயிரக்கணக்கான நோயாளர்கள் ஒன்றரை அல்லது இரண்டுவருடங்கள் வரை காத்திருக்க வேண்டி இருக்கின்றனர்.

அதற்கிடையில் நூக்கணக்கான நோயாளர்கள் மரணித்து விடுகின்றனர். அதனால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் என்ஜியோகிராம் பரிசோதனையை மேற்கொள்ள முடியுமான வசதியை செய்துகொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# 2025 அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டியில் கொழும்பு கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகள் வெற்றி!





ரமழான் மாதத்தை முன்னிட்டு Colombo Commodities நிறுவனம் வருடாந்தம் நாடளாவிய ரீதியில் நடத்திவரும் அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சிகள் இம்முறை ஐந்தாவது வருடமாக கொழும்பில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இறுதிப் போட்டிகள் பெப்ரவரி 27ஆம் திகதி கொழும்பு 10 அல்ஹிதாயா கல்லூரி எம்.ஸி. பஹார்தீன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நாடளாவிய ரீதியில் 60 பாடசாலைகள் பங்குபற்றின. அவற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற கொழும்பு கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும் திஹாரிய அல்அஸ்ஹர் கல்லூரி மாணவர்களுக்குமிடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகள் வெற்றி பெற்றனர்.

இரண்டாம் இடத்தை திஹாரிய அல்அஸ்ஹர் கல்லூரி மாணவர்களும் மூன்றாம் இடத்தை ஹெம்மாதகம அல்அஸ்ஹர் கல்லூரி மாணவர்களும் பெற்றுக்கொண்டனர்.

முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டியமாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 60 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் வெற்றிப் பதக்கமும் சான்றிதழும் பரிசுப் பொதியும் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் வெற்றிப் பதக்கமும் சான்றிதழும் பரிசுப் பொதியும் மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாவும் வெற்றிப் பதக்கமும் சான்றிதழும் பரிசுப் பொதியும் Colombo Commodities நிறுவன தலைவர் சமூக தீபம் எம்.ஸி. பஹார்தீன் இனால் வழங்கி வைக்கப்பட்டன.

பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக Colombo Commodities நிறுவனத்தின் தலைவர் சமூக தீபம் எம்.ஸி. பஹார்தீன் விஷேட அதிதிகளாக நிறுவனத்தின் பணிப்பாளர்களான ஹாஜியானி திருமதி ஷஹ்ரியா பஹார்தீன், பாஸித் பஹார்தீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் மாகாண ஆளுநர் அலுவலகம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் கலாச்சார மற்றும் பாரம்பரியம் குறித்து பொதுமக்களிடையே அதிக புரிதலை ஏற்படுத்தும் நோக்கில், 2025 மார்ச் 15 ஆம் திகதி முதல் 31 வரை ரமழான் கலாச்சார விழாவை ஏற்பாடு செய்ய மேல் மாகாண சபை திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் (05) மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநரின் தலைமையில் நடைபெற்றது.

மேல் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு நிறுவனமும் இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைக்க வேண்டும் என ஆளுநர் ஹனீப் யூசுப் இதன்போது தெரிவித்தார்.

மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் அவர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் இந்த விழாவை ஏற்பாடு செய்ய ரிசான் நாசீர் தலைமையிலான ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விழா, முஸ்லிம் சமூகங்களான Moors, Memons, Malays மற்றும் Dawood Borahs ஆகிய சமூகங்களின் உணவு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய கலாசாரங்களை வெளிப்படுத்தும் என்பதுடன் இது மத சகவாழ்வு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவவுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், MyBiz Chamber, Overseas Reality PLC, Cinnamon Hotels and Resorts , இலங்கை பொலிஸ்

நகர்ப்புற பாதுகாப்புப் பிரிவு (கொழும்பு), கொழும்பு நகர சபை, சுழயச புடழடியட, கொழும்பு மாவட்ட மஸ்ஜித் சங்கம், Anjuman-é-Solfi Trust (Sri Lanka), இலங்கை மலே சம்மேளனம், மற்றும் மேல்மாகாண ஆளுநர் அலுவலக அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## 1000 முக்கியஸ்தர்களை கௌரவித்து பொன்னாடை அணிவிக்கும் சாதனை

எமது நாட்டில் கல்வி, விளையாட்டு, கலை, கலாசாரம் போன்ற பல துறைகளில் சாதிக்கிறார்கள். அவர்களை ஊக்குவித்து பாராட்ட வேண்டும் என்ற நோக்கில் 1000 முக்கியஸ்தர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் சாதனை ஒன்றை கலாபூஷணம் பரீட் இக்பால் ஆரம்பித்துள்ளார் என யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் தெரிவித்துள்ளது.

# ஆர்.ஜே. மீடியாவின் ஐந்து வருடப் பூர்த்தி விழா








“முயற்சிக்கு என்றும் முதலிடம்” என்ற வாசகத்தை மையமாகக் கொண்டு பல சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்கி வரும் ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் ஐந்து வருடப் பூர்த்தி மற்றும் மகுட விருது வழங்கல் விழா, ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும், சமூகப்பணி இளம் கலைமாணியும் மற்றும் வானொலி அறிவிப்பாளருமாகிய ஏ. எம். இன்சாப் தலைமையில் கொழும்பு டவர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர். எம்.எம். பாஸில், கௌரவ அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் தேசபந்து. எஸ்.எல். மொஹம்மது ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம். அமீன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான யாகூப், சிரேஷ்ட ஊடகவியலாளரும், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான சிவா ராமஸாமி, சிரேஷ்ட ஊடகவியலாளரும், கெப்பிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது மேலாளருமான சியாஉல் ஹஸ்ஸன் மற்றும் வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலியின் முகாமையாளர் எம்.எஸ்.எம். இர்பான், சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சிரேஷ்ட ஒளிபரப்பாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் இலங்கை ஒலிபரப்பாளர்கள் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளருமான இர்ஷாத் ஏ. காதர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவியுமான புர்கான் பீ இப்திகார், சிரேஷ்ட ஊடகவியலாளரான ஸமீஹா சபீர் மற்றும் ராம் குணா அழகுசாதன மையத்தின் இயக்குனரான குணரத்னம் ஹரிசாந்த் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில், ஊடகம், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், ஆன்மீகம், சமூக சேவை, சாதனையாளர், இளம் தொழில் முயற்சியாளர் மற்றும் அரச நிர்வாகத் துறை என்ற பத்துத் துறைகளிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், இதில் ஆர்.ஜே.மீடியாவின் இரண்டு மாத கால ஊடகப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, அதிதிகள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விபரங்கள் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

(கே எ ஹமீட்)

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ வின் தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதன் போது அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை, கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விபரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

இதுவரையும் கொரோனா காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விபரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் உள்ளீர்கள். கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாசாக்கள் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெறவில்லை எனவும், முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிராக இன்றைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கா அன்று எங்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது எங்களுக்காக குரல் கொடுத்தார் என்பதனை நினைவூட்ட விரும்புகிறேன். இருப்பினும் ஏன் நீங்கள் இது வரையும் எரிக்கப்பட்டவர்களின் விபரங்களை சமர்ப்பிக்காமல் உள்ளீர்கள் ? இந்த விடயத்தில் எமது முஸ்லிம் சமூகம் மிகவும் கவலை அடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ விரைவில் கொரோனா



காலத்தில் எரிக்கப்பட்டவர்களின் விபரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை பல்வேறு கேள்விகளை சபையில் எழுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவனுக்கு கௌரவம்

(ரிபாஸ்)



கல்வி அமைச்சினால் கடந்த 2024 ஆம் ஆண்டு நடாத்தப் பட்ட "சமூக விஞ்ஞான போட்டியில் " தேசிய ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்ற நற்பிட்டிமுனை கமு/ லாபிர் வித்தியாலய மணவன் எச். அப்ரி அஹமட்டை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் சீ.எம்.நஜீப் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சீ.எம். ஹலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மாணவனின் பெற்றோர் மற்றும் மாணவனை கற்பித்து வழப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டதுடன் அதிதிகளினால் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# மதுரங்குளி மீடியாவின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(எம் எச் எம் சியாஜ்)







மதுரங்குளி மீடியாவின் ஏற்பாட்டில் கடந்த ரமழான் மாதத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய வினா - விடை போட்டி நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவும் , புலமையாளர்கள் மற்றும் ஆளுமைகள் கௌரவிப்பும் கடந்த வெள்ளிக்கிழமை (28) மாலை மதுரங்குளி ட்ரீம் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் என்.எம்.எம்.நஜீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்து சிறப்பித்தார். மேலும் விஷேட அதிதிகளாக முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என்.டி.எம். தாஹீர், முந்தல் மதுரங்குளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும், கடையாமோட்டை ஜாமிஉல் உமர் ஜும்ஆ மஸ்ஜித் தலைவருமான ஏ.எச். எம்.ஹாஷரூன், புத்தளம் தூய தேச கட்சியின் தலைவர் இஷ்ாம் மரைக்கார் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவில் கடந்த ரமழான் மாதத்தில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சியில் பங்கு பற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற போட்டியாளர்களில் இருந்து பிரதம அதிதியினால் வெற்றியாளர்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேடையில் வைத்து தெரிவு செய்யப்பட்டு அவரின் கரங்களாலேயே பணப்பரிசில்கள் வழங்கி வைத்ததும் சிறப்பம்சமாகும். முதலாம் இடம் பெற்ற அதிஷ்டசாலிக்கு 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம், இரண்டாம் இடம் பெற்ற அதிஷ்டசாலிக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம், மூன்றாம் இடம் பெற்ற அதிஷ்டசாலிக்கு 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் வழங்கப்பட்டதோடு, அதிஷ்டசாலிகள் பத்து பேருக்கு தலா 05 ஆயிரம் ரொக்கப் பணமும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு 2023, 2024 ஆண்டுகளில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் முகமாக பதக்கம் அணிவித்து, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பேராதனை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கவிதைப் பயிலரங்கு 2025





(இக்பால் அலி)

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும், பிரதான நூலக இந்திய தகவலகமும் இந்திய உதவித் தூதரகமும் இணைந்து நடாத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கான கவிதைப் பயிலரங்கு கடந்த புதன்கிழமை (05) இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் ஈழத்துக் கவிதை மரபிற்கும் மிக நீண்டகாலமாகவே அணுக்கமான தொடர்பொன்றுள்ளது. ஈழத்தின் முக்கியமான பல படைப்பாளிகளின் ஆரம்ப நாட்கள் பேராதனைக் களத்திலிருந்து உருவானதை அடையாளம் காண முடியும். அந்த வகையில் தமிழ்த்துறை வருடந்தோறும் ஒழுங்கமைக்கும் குறித்த பயிலரங்கு இம்முறை பேராதனைப் பல்கலைக்கழகப் பிரதான நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது. குறித்த நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றிய பேராதனைப் பல்கலைக் கழகப் பிரதம நூலகர் கலாநிதி ஆர். மகேஸ்வரன். "உலக தாய்மொழி தினத்தின் முக்கியத்துவம், அகத்திய முனிவர், தொல்காப்பியர் ஆகியோரின் இலக்கணப் பங்களிப்பு முதலான விடயங்களைக் குறிப்பிட்டார். மேலும் இந்திய, தமிழக அரசுகள் வெளியீடு செய்யும் நூல்களை பிரதம நூலகத்திற்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்" என்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்திய உயர் ஆணையர் ஸ்ரீமதி சரண்யா அம்மையாரிடம் கோரிக்கை யொன்றையும் முன்வைத்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய இந்திய உயர் ஆணையர் ஸ்ரீமதி சரண்யா "இத்தகைய நிகழ்வுகளை நடாத்துவது ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்குவதில் முக்கியமானது என்று கூறினார். பிரதம நூலகரின் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் எனவும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தொடர்ச்சியான செயற்பாடுகள் மகிழ்ச்சி அளிப்பதாகவும் தெரிவித்தார். மேலும் எதிர்வரும் காலங்களில் தமிழ்த்துறையின் முக்கியமான செயற்றிட்டங்களுக்கு தம்மாலான பங்களிப்புக்களை வழங்கமுடியும்" எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் வளவாளர்களாகக் கலந்துகொண்ட துறையின் மேனாள் தலைவர்களான பேராசிரியர் எம். ஏ. நுஃமான், பேராசிரியர் துரைமனோகரன் ஆகியோர் தொடர்ந்து அரங்கை வழிநடத்தினர். கவிதையின் தோற்றம், படைப்பு மனம், படைப்பாளுமையில் ஈடுபடும் மாணவர்களுக்கான தேர்ந்த வாசிப்பின் தேவை ஆகிய விடயங்கள் தொடர்பில் பேராசிரியர் துரைமனோகரன் அவர்கள் கலந்துரையாடினார். நிகழ்வின் நிறைவில் மாணவர்களின் கவிதைகள் அரங்கில் வாசிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.எம்.ஜே மீடியாவினால் நடாத்தப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு

சமூகத்தின் மத்தியில் இன்று மிக வேகமாக ஊடுறுவி வரும் போதைப் பொருட்களை இல்லாமலாக்கி "போதைப் பொருளற்ற உலகை எதிர்கால சந்ததிகளுக்கு கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் ஜே.எம்.ஜே மீடியாவினால் விழிப்புணர்வு நிகழ்வு உலகின் பல பாகங்களிலும் மிகச் சிறப்பாக இடம்பெற்று முடிந்தது.

ஜே.எம்.ஜே மீடியா நிறுவனத்தினால் ஒவ்வோரு மாதமும் சமூகத்திற்கு தேவையான ஒவ்வோரு நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அதற்கமைய இந்த பெப்ரவரி மாதம் தமது உலக நாடுகளில் உள்ள அவ் அமைப்பின் குழுவினருடன் இணைந்து திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வானது, நம் சமூகத்தின் மத்தியில் மிக வேகமாக ஊடுறுவி வரும் உயிர்க் கொள்ளியான போதைப் பொருள்களை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் போதைப் பொருள் பழக்கத்தை முற்றாக மனிதர்களிடம் இருந்து இல்லாமல் செய்ய வேண்டும் என்ற சிந்தனையுடனும் JMJ media நிறுவன பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் வழிகாட்டலினூடாக எதிர்கால தலைவர்களான பாடசாலை மாணவர்கள், தனியார் வகுப்பு மாணவர்கள், பல்கலை கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களை இணைத்து இவ் விழிப்புணர்வு நிகழ்வினை வெகுசிறப்பாக ஒழுங்குபடுத்தி நடாத்தி முடித்தனர்.

இந்நிகழ்வில் துஆ.து அநனயை இன் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஒருங்கிணைப்பாளர்கள், பல பிரதேசங்களைச் சேர்ந்த வெவ்வேறு துறையில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான விசேட கருத்தரங்குகளும் நடத்தப்பட்டிருந்ததோடு, ஊர்வலங்களும் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வின் சிறப்பம்சமே



வளர்ந்து வரும் நாளைய தலைமுறையான எம் இளைஞர்கள் உட்பட சிறுவர்களும் கலந்து சிறப்பித்தமையுமாகும். இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வை சிறப்புடன் வெற்றிகரமாக ஒழுங்கு செய்து முடித்த பெருமை அஃதுழுவண்ணளையே சாரும். இவர்களது இடைவிடா முயற்சியில் எதிர்வரும் காலங்களிலும் மேலும் சிறப்பாக பல்வேறுப்பட்ட நிகழ்ச்சிகளை சேவைகளையும் அனைவரும் எதிர்பார்க்கலாம். இவர்களின் ஒவ்வொரு சேவையும் சமூக விழிப்புணர்வுக்காகவும் எதிர்கால சந்ததியினரின் கல்வி அறிவின் வளர்ச்சிக்காகவும் தொடர்ந்து தேவை என்பதே எமது கருத்தாகும்.

# பாக்-இலங்கை உறவின் 75 ஆண்டு நிறைவு





பாகிஸ்தான் - இலங்கை இரு நாட்டு உறவின் 75 வது ஆண்டை குறிக்கும் வகையில் நினைவு முத்திரைகளை கூட்டாக வெளியிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 5ம் திகதி பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் பாகிஸ்தான் அஞ்சல் துறைக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அஞ்சல் துறைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.
இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஃபஹீம் உல் அஸ ீஸ் மற்றும் இலங்கை தபால் திணைக்கள தலைமை அஞ்சல் அதிகாரி எஸ்.ஆர்.டபிள்யூ.எம். ஆர்.பி. சத்குமார ஆகியோர் கைச்சாத்திட்டனர்.
இந்நிகழ்வு வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகத்தில் நடைபெற்றது.

## கனேதன்ன முஸ்லிம் வித்தியாலய ஊடக பிரிவு உதயம்






மாவனல்லை கனேதன்ன முஸ்லிம் வித்தியாலய ஊடக பிரிவு அண்மையில் மாவனல்லை மிட் தொழில்நுட்ப பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.எம். சித்தி பரீனா தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் அதிபர் பரீனா உரையாற்றுகையில் மாணவர்கள் மத்தியில் ஊடக ஆர்வம் மேலோங்கி காணப்படுகின்றது. அவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த ஊடக பிரிவு கல்லூரியின் நீண்ட கால தேவையாக இருந்த ஒன்றாகும். இங்கு வளவாளராக வருகை தந்துள்ள ஊடக யிற்றுவிப்பாளர் எமக்கு சிந்த வளமாக கருதுகின்றேன். அவரை நாம் நல்லமுறையில் பயன்படுத்துவதன் மூலம் எமது மாணவர்களுக்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க முடியும் என்றார்.
இந்த நிகழ்வுக்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ். அமீர் ஹூசைன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். கல்லூரி ஊடக பிரிவுக்கு பொறுப்பான ஆசிரியைகளான எம்.எஸ்.எப். சஹீதா, எம்.ஐ.எப். பஸ்மிலா, எம்.எஸ். ஹம்சியா, எம்.எப்.எப். ரிஹானா மற்றும் எம்.எஸ். ரம்ஜான் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஓய்வுபெற்ற பிரதி அதிபர் எம். நவாஸ் அவர்கள் இந்த நிகழ்வை நெறிப்படுத்தினார்.
எதிர்காலத்தில் கல்லூரி மாணவ மாணவியர்கள் மத்தியில் முறையான ஊடக அறிவை மேம்படுத்தும் வகையில் இந்த ஊடக பிரிவு மூலம் பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப் பட்டிருக்கின்றது.

## திருகோணமலை, கிண்ணியா, அல் - அதான் மகா வித்தியாலயத்தின் THE 2ND ANNUAL RISING STARS AWARD 2025 நிகழ்வு










திருகோணமலை, கிண்ணியா, அல் - அதான் மகா வித்தியாலயத்தின் THE 2ND ANNUAL RISING STARS AWARD 2025 நிகழ்வு கடந்த மாதம் (25) பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் அப்துல் அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தார்.
இதன்போது, கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர், கட்சியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முத்து முஹம்மட் மற்றும் அல் - ஹிக்மா நிறுவனத்தின் தலைவர் அஸ்ஷேக் அப்பாஸ் இபாதுல்லாஹ், கட்சியின் அரசியல் அதிகாரசபை உறுப்பினர்களான னுச. ஹில்மி முகைடீன், னுச. ஹில்மி மஹ்ரூப், கிண்ணியா நகர சபையின் செயலாளர் அனீஸ் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கற்பிட்டி பிரதேச செயலாளருக்கு பிரியாவிடை





**(எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் செயலாளராக சுமார் ஒரு வருட காலம் தற்காலிக இணைப்பு செய்யப்பட்டிருந்த எஸ் மிளங்க பிரபாத் நந்தசேன திங்கட்கிழமை (03) முதல் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்று செல்கின்றார்.
இதனையொட்டி கற்பிட்டி பிரதே செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் பிரியதர்ஷினி தலைமையில் செயலாளருக்கான பிரியாவிடை நிகழ்வு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இதில் கற்பிட்டி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் காரியாலய ஊழியர்கள் என சகலரும் கலந்து கொண்டதுடன் செயலாளருக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய தூதுவர் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு








**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

கொழும்பில் இந்திய தூதரகம் சார்பில் ரமழான் இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிசாட் பதியுதீன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.
இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை(04) மாலை கொழும்பு கோள்ஃபேஸ் ஹோட்டலில் சிறப்பு ரமளான் இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த இஃப்தார் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டிருந்த மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுபினை இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜா வரவேற்றார்.
இந்த நிகழ்ச்சியில் இந்திய தூதர் சந்தோஷ் ஜா, மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் ஆகியோர் பேசுகையில் இந்திய அரசு இலங்கைக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கியதற்கு இலங்கை அரசு மூலமாக நன்றிகள் தெரிவித்து பேசினார்கள்.
இந்த விழாவில் தேசிய ஒருமைப்பாட்டு இணை அமைச்சர் அமைச்சர் முனீர் முலாபர், எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, அகில இலங்கை ஜம் இயத்துல் உலமா தலைவர் மௌலவி ரிஸ்வி முப்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிசாட் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ், நிசாம் காரியப்பா, எம். எஸ். உதுமான் லெப்பை, எம். எஸ். நளீம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சரத் பொன்சேகா, பைசல் காசிம், அலி ஷாகிர் மௌலானா, மவ்லவி ஹாபிஸ் நசீர், பாராளுமன்ற உறுப்பினர்கள் பௌசி, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், எம். ஏ. எம். தாஹிர், எஸ். எம். மரிக்கார், முஹம்மது பைசல், முன்னாள் வெளியுறவு துறை அமைச்சர் அலி சப்ரி, அகில இலங்கை மலேசியா, துருக்கி, இந்தோனேசிய, மற்றும் முஸ்லிம் நாடுகளில் தூதர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன், பொதுச் செயலாளர் ஸாதிக் சிஹான், தேசிய அமைப்பாளர் இர்ஷாத் காதர், துணைத் தலைவர் ரிப்தி அலி, தூதரக பிரதானிகள், நீதிபதிகள், வர்த்தக மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரையும் உயர் ஸ்தானிகர் வரவேற்றிருந்தார். தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் வாதிகள் , ஊடகவியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.
இந்த இஃப்தார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் செய்து இருந்தார்கள்.

# அமானா வங்கி, Havelock City இணைந்து கண்டியில் முன்னெடுத்த வாடிக்கையாளர்கள் மத்தியில் சொகுசான வாழிட செயற்பாடு



அமானா வங்கி, Havelock City உடன் இணைந்து கண்டி பிராந்தியத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான தெளிவுபடுத்தும் நிகழ்வொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது, Havelock City தமது தொடர்மனைகள் பற்றிய விளக்கங்களை வழங்கியிருந்ததுடன், சொகுசான தொடர்மனைகளை கொள்வனவு செய்வதற்கு பிரத்தியேகமான நிதிவசதியளிப்பு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது பற்றிய விளக்கங்களை அமானா வங்கி வழங்கியிருந்தது.

Havelock City இன் வடிவமைப்பாளர்களான Mireka Homes (Pvt) Ltd. உடன் அமானா வங்கி ஏற்படுத்திக் கொண்ட பங்காண்மையின் அங்கமாக இந்த வாடிக்கையாளர் நிகழ்வு அமைந்திருந்ததுடன், மக்களுக்கு நட்பான நிதிவசதியளிப்பு சேவைகளுடன், வாடிக்கையாளர்களுக்கு கொழும்பில் உயர்மட்ட சொகுசு சொத்துகளை கொள்வனவு செய்வதற்கு உதவியாக அமைந்திருந்தது.

நிகழ்வில் பங்கேற்றவர்களில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு உப தலைவர் சித்தீக் அக்பர், நுகர்வோர் நிதியியல் தலைமை அதிகாரி ரியாஸ் நூர், பங்காண்மை ஈடுபாட்டு அதிகாரி ஹர்ஷினி மோஹன் மற்றும் Mireka Homes இன் விற்பனை பொது முகாமையாளர் நிருபா பீரிஸ் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

அமானா வங்கியின் நிதிவசதியளிப்பு தெரிவுகள் தொடர்பான பரந்த விளக்கம் நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. அதில், மூன்று தினங்களுள் துரிதமான அனுமதி மற்றும் தனிநபர் வருமான மட்டங்களுக்கு பொருந்தக்கூடிய வகையில் அமைந்த நெகிழ்ச்சியான மீளச் செலுத்தும் திட்டங்கள் போன்றன அடங்கியுள்ளன. அதனூடாக மிருதுவான மற்றும் சௌகரியமாக இல்லக் கொள்வனவு செயன்முறை உறுதி செய்யப்படுகின்றது.

இந்த கைகோர்ப்பு தொடர்பில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், “Havelock City உடனான எமது பங்காண்மையினூடாக, இலங்கையில் உயர் தரம் வாய்ந்த வசிப்பிடப் பகுதிகளுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்ய ஆதரவளிப்பதில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற, பொருத்தமான நிதிவசதியளிப்பு தீர்வுகள் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய அங்கமாக இது அமைந்திருப்பதுடன், பாதுகாப்பான சொத்துகள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது.” என்றார்.

அமானா வங்கியின் தொடர்மனை நிதிவசதியளிப்பு தீர்வு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு றறற. யஅயயெடியமெ.டம எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும் அல்லது 011 7 756 756 ஊடாக தொடர்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது.

ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB F&g; ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக ஏசியன் பாங்கர் அமைப்பினால் தரப்படுத்தப்பட்டிருந்தது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வில், அமானா வங்கியின் அதிகாரிகளாக சித்தீக் அக்பர், நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு உப தலைவர், Mireka Home விற்பனை பொது முகாமையாளர் நிருபா பீரிஸ் மற்றும் இதர பிரதிநிதிகளுடன் காணப்படுகின்றார்.




# வாசிப்பும் ரமழானும்

இது வெறும் வார்த்தை அல்ல இது நிரந்தரமான ஒரு வாழ்க்கைக்கான வழிகாட்டல்.

மாற்றுப் பொறிமுறையில் கட்டாயம் பின்பற்றித்தான் ஆக வேண்டும் என இறைவன் விடுகின்ற அறக்கட்டளை இறை கட்டளை.

வாழ்வியல் நிலைமாற்றுத் தலம் ஒன்றை நோக்கி சமூகத்தை கொண்டு செல்வதற்காக இறைவன் ரமலான் மாதத்தை தேர்வு செய்து அதிலே இறுதித் தூதருக்கு நிரந்தர இறுதித் தூதை வழங்கத் தீர்மானித்து

அதன் முதல் கட்டளையை அறிவோடு சிந்தனையோடு செயல்பாட்டோடு அமைத்து வைத்து விட்டான்.

ஏனைய கட்டளைகள் போல பத்தோடு பதினொன்றாக இதனையும் எடுத்துக் கொண்டு கடந்து சென்றுவிட முடியாது

ரமலான் மாதத்திற்கு எத்தகைய புனிதத்துவம் கொடுக்கப்படுகின்றதோ அதில் அருளப்பட்ட புனித அல்குர்ஆனுக்கு எத்தகைய கௌரவம் அளிக்கப்படுகின்றதோ அதற்கு நிகரான கண்ணியமும் சங்கையும் அதிலே கொடுக்கப்பட்ட முதல் போதனையான வாசிப்புக்கும் அது சார்ந்த செயல்பாடுகளுக்கும் அதனோடு பின்னிப்பிணைந்த சகல அம்சங்களுக்கும் கொடுத்தே ஆக வேண்டும்.

படைத்த உமது ரட்சகனின் பெயரைக்கொண்டு வாசிப்பீராக என்பதை பல்வேறு கோணங்களில் புரிய, விளங்க விளக்க வேண்டும்.

உன்னை அவன் தனித்துவமானவனாகவே படைத்துள்ளான். அந்தத் தனித்துவத்தை அறிவுபூர்வமாக அடையாளப்படுத்த வாசிப்பை அறக்கட்டளையாக விட்டிருக்கின்றார் மனிதனுக்கு வானவர்கள் சிரம் தாழ்த்த சொல்லப்பட்ட போது அவர்கள் சிரம் தாழ்த்தியமைக்கான பிரதான காரணம் அறிவும் சிந்தனையும் தெரிவிச்சுந்திரமும் செயல் சுதந்திரமும் கொடுக்கப்பட்டவர்களாக மனிதர்கள் இறைவனால் படைக்கப்பட்டது தான் காரணம் எனவே மனிதன் சரியை பிழையை மிகச் சரியாக தெரிவு செய்து அறிவுப்பூர்வமாற ஒரு வாழ்வை

ஒழுங்கமைத்து வாழ வழிகாட்டுவது வாசிப்புதான் என்பதனை மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

உன்னை உன் ஆற்றலை ஆளுமையை அடையாளத்தை நீ காண வாசித்தே தான் ஆக வேண்டும்

உன் உண்மையான தன்மையை உள்ளடக்கத்தை Potentiality ஐ காண வாசிக்கத்தான் வேண்டும்.

அதன் வழியாகவே நீ பிரபஞ்சத்தையும்

அதன் படைப்பாளனான இறைவனையும் காணலாம்

இல்லாத போது நீ உன்னிலை இழப்பாய் முன்னிலை தொலைப்பாய்

தன்னிலை அறியாதிருப்பாய்

இந்நிலை உன்னை மற்றவரின் பிரதியாகவே மாற்றிவிடும்

நீ நீயாக

நிறைவாக

நிரப்பமாக வாழ

வாசிப்பதே வழி

அலக் எனும் நிலை கடந்து தான

எனும் கட்டம் முடிகிறது.

உனது படைப்பு

நீ ஒரு தனித்துவ படைப்பென நிருவ வாசிப்பு மட்டுமே சாதனம்!

உனது ம் உன் இறைவனதும்

கண்ணியம் உனது வாசிப்பு வழியாகவே ஊர்ஜிதமாகிறது.

அந்த வாசிப்பு எழுத்துக்கு வித்திட வேண்டும்.

எழுதுவார் எல்லோரும் வாசிப்பவர்கள் அல்ல.

ஆனால், வாசிப்போர் நிச்சயம் எழுத கடமைப்பட்டுள்ளனர்

அது தார்மீக விதி, அதன் வழிதான் அறிவை அனுபவத்தை ஜனரஞ்சகமாகவோ

மயமாக்கவோ முடியும்.

அவன் அப்படித்தான் கற்பித்தான்

அதன் வழியாக அறியாமை போக்கினான்.

இதனை புரியாதவன் தேடலால் வாசிப்பால் திறனால் அறிவால் அத்துமீறுவான் தன்னை விட்டால் தன்னிகரற்ற யாருமே இல்லை என உணர்கையில் இது அறிவு சார் அதிதீவிர நிலை அனுமதிக்கப்படாத நிலை.










கம்போடிய நாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற இஸ்லாமும்,பௌத்தமும் என்ற சர்வதேச மாநாட்டில் அகில இலங்கை ஜெம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி,பிரதிச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.தாஸீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.முதலாவது படத்தில் கம்போடிய நாட்டின் இஸ்லாமிய மத விவகாரப் பொறுப்பாளர் டாக்டர் உஸ்மான் ஹஸனுடன் உலமா சபைத் தலைவர் மற்றும் பிரதிச் செயலாளர் நிற்பதையும்,இரண்டாவது படத்தில் கம்போடிய பெரிய விகாரைக்குச் சென்ற போது விகாராதிபதி மற்றும் அந் நாட்டு மகா நாயக்க தேரருடன் , ஸ்ரீலங்கா மகாபோதி சங்கத் தலைவர் பானகல உபதிஸ்ஸ தேரர் உரையாடுவதையும், மூன்றாவது படத்தில் கம்போடியாவுக்கான அரபு லீக் பிரதிநிதி,தாய்லாந்தின் பௌத்த சங்கத் தலைவர், பேராசிரியர் ராகுல தேரர், மலேஷியாவின் பௌத்த சங்கத் தலைவர் உட்பட மேலும் பலர் காணப்படுவதையும்,நான்காவது படத்தில் ஜப்பானியாவின் பௌத்த மதகுரு, பொகவந்தலாவ ராகுல தேரர்,பானகல உபதிஸ்ஸ தேரர்,மௌலவி எம்.எஸ்.எம்.தாஸீம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.






நாச்சியாதீவு பர்வீன்

# "கழுதை மனிதன்"
# மொழிபெயர்ப்பு சிறுகதைகள்
## - ஒரு வாசகனின் வாக்கு மூலம் -

**பஸ்லி ஹமீட்**

சிறுகதைகள் வாசகர்களின் சிந்தனையை மேம்படுத்துகின்றன. அத்தோடு தன்னம்பிக்கை, மனிதாபிமானப் பண்புகளை வளர்க்கவும் உதவுகின்றன. சிறுகதைகளுக்கான கதைக் கருக்கள் சமுதாயத்திலிருந்தே பெறப்படுகின்றன. ஒரு எழுத்தாளன் எப்போதும் தான் சார்ந்த சமுதாயத்தை அவதானித்துக் கொண்டே இருக்கிறான். அச்சமுதாயத்தின் முக்கிய அசைவுகளை கதைகளாகப் பதிவு செய்து அவற்றைப் பிறிதொரு சமூதாயமும் அறிந்து கொள்ளும்படி செய்கிறான். இவ்வாறு எழுதப்படும் கதைகள் அவற்றின் மூல மொழிகளைத் தாண்டி வேறு மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு உலகளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

அந்த வகையில் அஷ்ரஃப் சிஹாப்தின் அவர்கள் அண்மையில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள "கழுதை மனிதன்" சிறுகதைத் தொகுப்பில் மேற்சொன்ன விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் ஏற்கனவே பல மொழிபெயர்ப்பு நூல்களைத் தந்து அவரது மொழிபெயர்ப்பு ஆற்றலுக்காக அரச சாகித்ய விருது பெற்றவர். ஆகவே இந்நூல் வாசகர் மனங்களில் முன்கூட்டிய ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. அந்த எதிர்பார்ப்பை ஈடேற்றுவதுபோல் அற்புதமான ஒன்பது சிறுகதைகளைத் தெரிவு செய்து இதில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார் அவர்.

நூலின் முதற்கதையான ஆஷாபூர்ணா தேவி எழுதியிருக்கும் தீப்பெட்டிகள் என்ற கதை ஒரு மனைவியின் சயகௌரவம் பற்றிப் பேசுகிறது. எந்தப் பெண்ணும் கணவனிடத்திலானாலும் தனது சுயத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே விரும்புவாள். ஆனாலும் நடைமுறை வாழ்வில் அனேகமான பெண்கள் கணவன்மாரிடத்தில் தமது சுயத்தை இழந்தே வாழ்கின்றனர். அர்களால் சுயமாகத் தீர்மானம் எடுக்க முவதில்லை, தமது அந்தரங்கங்களை பேணவும் முடிவதில்லை. திருமணம் என்ற பந்தத்தின் மூலம் இப்படிப்பட்ட பெண்ணின் மீது முழு அதிகாரத்தையும் செலுத்துவதற்கு ஆண் எப்படி உரிமை பெறுகிறான்? அவன் தானாக எடுத்துக் கொள்கிறானா? அல்லது சமுதாயம் வழங்கியுள்ளதா?

மனைவிக்கு வரும் கடிதங்களை எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் இன்றி அவளுக்குத் தெரியாமல்ய படித்துப் பார்க்கும் ஒரு கணவனுக்கும் அந்தக் கீழ்த்தரச் செயலை அறிந்து கொண்ட மனைவிக்கும் இடையில் நடக்கும் ஒரு வாக்குவாதமே இந்தக் கதையின் பிரதான பகுதி. இக்கதையில் பெண்களைத் தீப்பெட்டிகளுக்கு ஒப்பிடுறார் கதாசியர். தீப்பெட்டி தானாக ஒருபோதும் எரிவதில்லை. அதனை யாராவது உரசும் போதே அது நெருப்பைக் கக்குகிறது. .அது போன்றுதான் பெண்களும், அவர்கள் பூமியைப் போன்று பொறுமையானவர்கள். அவர்களின் உணர்வுகளை உரசிப் பார்க்கும் போதுதான் அவர்களிடமிருத்து பூகம்பம் வெடிக்கத் தொடங்குகிறது. என்பதைக் கதையில் அழகாக உணர்த்துகிறார் கதாசிரியர். அதே நேரம் கணவன்மார்கள் தத்தமது மனைவியரை எப்பொழுதும் கைக்கடக்கமாக தீப்பெட்டிகள் போன்றே வைத்திருக்கின்றனர். மனைவிமார் நெருப்பாய் சீறிப் பாய்ந்தாலும் தமது மூச்சுக் காற்றினாலேயே அதன் சுவாலையை ஊதியணைத்து விடுகிறார்கள். இதானாலேயே பெண்கள் பூகம்பமாக எழுந்தாலும் அடுத்த நிமிடமே கணவன்மாரின் சுயத்தைப் பாதுகாக்க விளைகிறார்கள். என்பதையும் இக்கதை சொல்லி நிற்கிறது.

இரண்டாவது கதையான வெள்ளைப் பாம்பு கதையும் பெண்களின் குணத்தைப் பற்றியே பேசுகிறது. அதை ஒரு மூட நம்பிக்கையை வைத்து வாசகர்களுக்கு விளக்கியிருக்கிறார் கதாசிரியர். இக்கதையை ஜயந்த ரத்னாயக்க என்பவர் எழுதியுள்ளார். கீரியு பாம்பும் போலிருந்த இரண்டு பெண்கள் ஒரு வெள்ளைப் பாம்பைக் கண்ட பின்பு அது தமக்கு அதிஷ்டத்தைக் கொண்டு தருவதாகச் சொல்லி நட்பாகி விடுகிறார்கள். காலாகாலமாக சண்டையிட்டுக் கொண்டிருந்த அவர்கள் நட்பாகி இணைந்ததும் அவர்களுக்கு சாதகமாகவே தொடர்ச்சியாக சில விடயக்கள் நடைபெருகின்ற. இவற்றின் முழுப் பெறுமதியும் வெள்ளைப் பாம்பையே சென்றடைகின்றது. நடப்பு வாழ்வில் நாமும் அப்படித்தானே? எமது சொந்த முயற்சியால் பலவிடயங்கலைச் செய்திருப்போம் ஆனாலும் அதன்பெறுமதியை இன்னொருவர் பெற்றுக் கொண்டிருப்பார். இக்கதையின் முடிவில் கதாசியர் மூட நம்பிக்கையைத் தெளிவுபடுத்திக் காட்டுகிறாரா? அல்லது அதை நம்பும்படி வாசகர்களை அறிவுறுத்துகிறாரா? என்பதை வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.




அஸீஸ் நெஸின் எழுதியிருக்கும் "கழுதை வணிகம்" கதையைப் படித்தவுடன் இரத்தினபுரிக்கு மாணிக்கக் கல் வாங்கச் சென்ற ஒருவர் அடுப்புக் கல்லை விலை பேசி அதில் பானையை முட்டுக் கொடுத்து வைத்திருந்த பெருமதி மிக்க மாணிக்கக் கல்லையும் சேர்த்து வாங்கிய சம்பவமே ஞாபகத்திற்கு வந்தது. அந்த வியாபாரி இக்கதையில் வரும் துருக்கியில் ஒரு கிராமத்தில் கழுதைகள் விற்கும் வயோதிபரைப் போன்று இருந்திருத்தால் இந்நேரம் பெரும் கோடீஸ்வரராக மாறியிருப்பார். உண்மையில் கதையில் வரும் கிழவர் கழுதை வியாபாரத்தில் யாரையும் ஏமாற்றவில்லை. அவர் விற்பதற்காக வைத்திருக்கும் கழுதை பற்றிய உண்மைத் தகவல்களையே சொல்லி விற்கிறார். இருந்தாலும் தெரிந்தோ தெரியாமலோ ஒரு தந்திரம் செய்கிறார். ஆனால் இந்தத் தந்திரத்தைப் புரிந்து கொள்ளாமல் கிழவரிடம் கழுதை வாங்க நினைப்பவர்களே அவரை ஏமாற்ற நினைத்துத் தாம் ஏமாந்து போய் விடுகின்றனர். இக்கதையில் ஒருவரை ஏமாற்றிப் பொருள் வாங்குவது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதனை கதாசிரியர் நகைச்சுவை ததும்பு விபரிக்கிறார்.

பாரி மன்ஸூரி அவர்கள் "வானவில்" என்ற கதையினூடாக யுத்தத்தின் கடும் தன்மையை எடுத்துக் காட்டுகிறார். யுத்தம் கொடூரமானது அது கறுப்பு நிறமானது, வானவில் அழகானது அது பல வர்ணங்களைக் கொண்டது. தொடர் யுத்தம் கக்கிய கடும் கரும் புகை மண்டலங்கள் அழகான வானவில்லை மறைத்து விட்டிருந்தன. புத்தகங்களில் அல்லது கண்ணாடிக் கோலிக் குண்டு (டீக்போல்) வைத்து விளையாடும் சிறுவர்கள் அவற்றைக் கண்ணருகில் வைத்து சூரியனைப் பார்க்கும்போது மட்டுமே வாவில் தெரிகின்றது. யுத்தம் வாழ்க்கையில் அழகான பக்கங்களை எப்படிக் கறுப்பு நிறமாக மாற்றி வைத்துள்ளது என்ற சிந்தனையை வாசகர் மனங்களில் ஏற்படுத்துகிறார் கதாசிரியர்.

அடுத்து புத்ததாஸ ஹேவகே எழுதியுள்ள "ஒரேயொரு எதிர்பார்ப்பு" என்ற கதை ஒரு தந்தையின் பாசத்தைப் பற்றிப் பேசுகிறது. கதையில் வரும் ஆசிரியர் பயிற்சிக் காலாசாலையின் அதிபர் தனது காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த தந்தை பிற்காலத்தில் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த போது அவரை உதாசீனம் செய்கிறார். ஆனால் அந்தத் தந்தையோ மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் தனது பிள்ளைகள் நல்ல நிலையில் இருப்பதைப் பார்க்க ஆசைப்படுகின்றார். இக்கதை வாசகர்களைப் பல கோணங்களில் சிந்திக்கச் செய்கின்றது.

வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருப்பவர்களுக்கு ஒவ்வொரு காலைப் பொழுதும் கசப்பாகத்தான் பிறக்கும். கதையில் வரும் தம்பதியினருக்கு இரண்டு குழந்தைகள். குழந்தைகளை சரியான முறையில் வளர்த்துக் கொள்ள வழியில்லாத தந்தை வறுமையிலிருந்து மிள்வதற்குத் தனது சிறுநீரகம் ஒன்றை விற்க முடிவு செய்கிறார். அதனை விரும்பாத தாய் தமது குழந்தைகளில் ஒன்றைத் தத்துக் கொடுக்கலாம் என்கிறாள். இப்படி வாழ்வோடு போராடி வறுமையை வென்றிட அத்தம்பதியினர் எடுக்க விளையும் முயற்சிகளை மனம் உருகும் விதத்தில் கதையாக்கியிருக்கிறார் மஹ்மூத் ஸயீத் "கசந்த காலை" என்ற இந்தக் கதையை ஏழு மாதக் குழந்தையின் இனிமையான சிமிசங்களுடனேயே ஆரம்பித்து வைக்கிறார் கதாசிரியர்.

மிருனாள் பாண்டேயின் "பெட்டை நாய்" என்ற கதை இந்தியாவில் உள்ள மூட நம்பிக்கைகளைப் பற்றிக் கதைக்கிறது. குடும்ப தோசத்தைக் கழிப்பதற்காக நான்கு வயதுச் சிறுமியை ஒரு நாய்க்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். இச் செய்தி பத்திரிகையில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்த போதிலும் குறிப்பிட்ட மூட நம்பிக்கையைச் சார்ந்த சமூகத்தில் இது ஒரு பெரிய விடயமாகப் பார்க்கப்படுதில்லை. இதைவிடவும் பல பாரிய மூட நம்பிக்கைகள் அச்சமூகத்தாரிடம் மலிந்து காணப்படுகின்றன என்ற உண்மை இக்கதையினூடே தெரியப்படுத்துகிறார் கதாசிரியர்.

அடுத்து நூலின் மகுடக் கதையாகிய முஹம்மத் நஸருல்லாஹ் கான் எழுதீயிருக்கும் "கழுதை மனிதன்" என்ற கதை சாதீய ஏற்றத் தாழ்வுகளின் கொடுமைகளையும் விளைவுகளையும் எடுத்துக் காட்டுகிறது. /ஹஸைனி பவ்லி என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவன் உயர் குலத்து ஒருவரின் வீட்டில் மிருகங்களோடு மிருகமாய் வளர்க்கப்பட்டு வருகிறான் அவனது வாழ்வைச் சுற்றியே நகர்கிறது கதை. பாகிஸ்தானிய பவ்லிகள் இந்து மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இனத்தினர். இவர்ங்கள் தண்ணீர் இறைப்பது, மந்தைகளை மேய்ப்பது, கூலி வேலை செய்வது போன்ற தொழில்களையே செய்து வருகின்றனர். கதையில் வரும் ஹுஸைனி பவ்லி அனுபவிக்கும் கொடுமைகள் வாசகரின் மனங்களைத் தைக்கின்றன. அதிகாரம் மிகுந்தவர்களுக்கு மத்தியில் குரலற்று இருப்பவர்கள் எத்தனை சித்திரவதைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது? எமது சமூகத்திலும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தப்படும் சிறுவர்களும் ஹுஸைனி பவ்லிகள் போன்றவர்களே. அவர்களது சின்னஞ்சிறு மனங்களில் இருக்கின்ற ஆதங்கங்களை அதிகாரத்துடன் ஆதிக்கம் செலுத்தும் பெற்றோரிடம் வெளிப்படுத்த முடியாமல் சதா புத்தகங்களுடனேயே உறவாடி புத்தகங்களுடனேயே உறங்க வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கழுதை மனிதனை வாசித்து முடிக்கும் போது ஹுஸைனி பவ்லி என்ற அந்தக் கதாபாத்திரம் வெறும் கற்னைப் பாத்திரமாகவே இருக்கட்டும் என்ற எண்ணமே மனதில் எழுகின்றது.

"ஸ்தெபன்வூல்ஃப்" (Steppenwolf) என்பது ஜெர்மன் எழுத்தாளர் ஹேர்மன் ஹெஸ்ஸே எழுதிய ஒரு புகழ்பெற்ற நாவல். இது ஒரு உலவியல் நாவல்.

இந்த நாவலின் மூன்று பிரதிகளை வாங்கிக்கொண்டு லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்திலிருந்து நிவ்யோர்க் சென்று அங்கிருந்து சென் பிரான்சிஸ்கோ நகருக்கு தொடரூந்தில் பிரயாணம் செய்யும் ஒருவரின் பயண அனுபவங்களைச் சொல்லும் கதையே நூலின் இருதியில் உள்ள "சென்பிராஸ ிஸ்கோ செல்லும் ஸ்தெப்பன்வூல்ஃப்". இதை சாமுவெல்
ஷிமொன் எழுதியுள்ளார். லண்டனில் வாங்கிய ஸ்தெப்பன்வூல்ஃப் மூன்று பிரதிகளுக்கும் என்ன நடந்தன? என்ற கேள்விக்கான பதிலுடன் மேலைத்தேய மக்களின் இயல்பு, அவர்களது சிந்தனை, வாழ்க்கை முறை போன்ற பல விடயங்களை இக்கதையில் அனுபவிக்கலாம்.

இச்சிறுகதைகள் அனைத்தும் தரத்தில் உயர்ந்து நிற்பதற்கான காரணம் அவற்றில் உள்ள கதைகள் சொல்லப்பட்ட (முன்வைப்பு) விதமே. தேர்ந்தெடுக்கப்பட்ட கதைக் கருக்களுக்கு பொறுத்தமான கதா பாத்திரங்களையும் அவைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட நேர்த்தியான உரையாடல்களையும் தேவைக்கு மீறாத காட்சியமைபுகளையும் (வர்ணனை) இக்கதைகள் கொண்டிருக்கின்றமையே. தொடர்ச்சியாக இக்கதைகளை வாசிக்காமல் ஒவ்வொன்றாக நிறுத்தி நிறுத்தி வாசிப்போமேயானால் இக்கதைகள் தரும் பாதிப்பு மனதில் நீண்ட நேரத்திற்குத் தங்கி நிற்பதை உணரலாம்.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் மொழிபெயர்ப்பு ஆற்றலைப் பற்றி அலாதியாகச் சொல்வதற்கில்லை. அவர் அப்பணியை மிக நுணுக்கமாகச் செய்பவர். அவருடைய வசனங்கள் வாசிப்பற்கு மிகவும் இன்பமாக இருக்கும். அவர் ஒருபோதும் கடினமான சொற்களை வசனங்களில் பயன்பத்தாமையே அதற்கான காரணமாக இருக்கலாம். "தீப்பெட்டிகள்" என்ற கதையில் முதன் முதலாக "கடிதக் கூடு" என்ற சொல்லை வாசித்தேன். கடித உறை என்றே பழக்கப்பட்டிருந்த என்னை அந்தச் சொல் அந்த இடத்தில் சற்று தாமதிக்கச் செய்தது. அந்த இடத்திற்கு அந்தச் சொல் மிகவும் பொறுத்தமாகவும் அழகாகவுமே இருந்தது. அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் சொற்களைத் தேர்ந்தெடுக்கும் போது எவ்வளவு மெனக்கிடுகிறார் என்பதை இது எனக்கு உணர்த்தியது. இது போன்று பல இடங்களில் அவர் பயன்படுத்தியிருக்கும் சொற்கள் அந்தந்த வசனங்களை மெருகூட்டி நிற்பதைக் காணலாம்.

அதே போன்றே நூலின் கடைசிப் பகுதியில் கதாசிரியர்களைப் பற்றிய குறிப்புகளைத் தந்திருப்பது வாசகர்களுக்கு அவர்களைப் பற்றிய அறிமுகத்தைப் பெற்றுக் கொள்ளவும் அவர்களின் ஏனைய படைப்புகளைத் தேடிப்படிப்பதற்கும் வசதியாக உள்ளன.

மொத்தம் 110 பக்கங்களுக்கும் கைக்கு அடக்கமான சிறிய இத்தொகுப்பில் குறைகள் என்று சொல்வதற்குப் பெரிதாக ஒன்றுமில்லை. ஓரிடத்தில் ஒரு வாக்கியத்தில் ஓரே சொல் திருப்பத் திரும்ப இரண்டு முறைகள் வந்திருப்பதையும் வேறு சில இடங்களில் சொற்களில் ஒரெழுத்து தவற விடப்பட்டிருப்பதையும் காண முடிந்தது. எழுத்துக்கள் அளவில் சிறியதாக இருக்கின்றன. இது சிலருக்கு வாசிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தலாம். ஆனாலும் இவை எதுவும் புத்தகத்தின் தரத்தைப் பாதிப்பதாய் இல்லை.

மொத்தத்தில் சிறுகதைப் பிரியர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய ஒரு நூலாக இது இருக்கின்றது.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களை வாழ்த்துவதோடு அவர் இது போன்ற இன்னும் பல மொழிபெயர்ப்பு நூல்களைத் தர வேண்டும். அல்லாஹ் அவருக்கு அதற்குரிய திறனையும் தேகாரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்குவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

# பாவக் காய்கள்

எத்தனை பாவக்காய்கள்
எந்தன் தோட்டத்தில். .

அறியாது நீரூற்றித்
தெரியாது உரம் இட்டுப்
புரியாமல் வளர்த்து
விட்டதன் விளைவாய்,

முற்றி விளைந்து
சுற்றிப் படர்ந்து
என் தோள்களை
அழுத்தும் இந்தப்
பாவக்காய்கள்

வெட்டி எறிந்து
தோட்டத்தை
வெட்ட வெளியாக்கிட

ஒட்ட நறுக்கி
ஒட்டு மொத்தமாய் விசிறி விட

அந்தப்
பாவநாசினி
எந்தக் கடையில்...?

- தீரன் -



# பொழுதுகளை பொன் செய்வோம்

அற்புத மாதமொன்றில்
அடியெடுத்து வைத்துள்ளோம்
அதற்கு வழி செய்து தந்த
அல்லாஹ்க்கு நன்றி சொல்வோம்

மாதமிதை அடைந்ததுவோ
மனிதனது பாக்கியம்
இதன்
மகத்துவத்தைப் பகர்கிறது
மறை குர்ஆன் வாக்கியம்

ஆண்டாண்டு வருகின்ற
அல்லாஹ்வின் வெகுமதி
அளவிடவே முடியாது
அதனுடைய பெறுமதி

புனித மறை இறங்கி வந்த
புண்ணிய மாதம் இது- பாவ
கறை அனைத்தும் களைகின்ற
கண்ணிய மாதம் இது

ஆயிரம் மாதங்களை விட
அதி சிறந்த நாளொன்றை
கைவசம் வைத்திருக்கும்
கனதியான மாதம் இது

படைத்தவனின் அருள் இறங்கும்
பாவம் பொறுத் தருளும்
நரகை விடுவிக்கும்
நன்மை மிகு மாதம் இது

மதித்தாலும் மிதித்தாலும்
மாதம் நம்மை கடந்து விடும்
கடப்பதற்குள் நாம் உணர்ந்து
காலமிதைப் பொன் செய்வோம்

பகலெல்லாம் பசித்திருந்து
இரவெல்லாம் விழித்திருந்து
திக்ர் தொழுகை ஓதலிலே
தினாந்திரத்தை முழுமை
செய்வோம்!

பொறுமையினை கடைப் பிடித்து
புயல் கதியில் கொடை கொடுத்து
மறுமையினை மனம் பதித்தி
மாதமிதை நிறைவு செய்வோம்!

**உக்குவளை, பஸ்மினா அன்ஸார்**

## மனநலமும் ஆலோசனையும் 73

# நோன்பும் மூளை ஆரோக்கியமும்

மூளை மனித உடலின் மிகவும் முக்கியமான பகுதியாகும்.

இந்த உறுப்பு புத்திசாலித்தனத்தின் இருக்கையாகவும், புலன்கள் தரும் தகவல்களை சரியாக அடையாளம் காணும் கருவியாகவும், உடல் இயக்கத்தைத் ஆரம்பிக்கும் இடமாகவும் நடத்தைகளை கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டாளராகவும் செயற்படுகிறது.

இப்படி பல வழிகளில் எமக்கு உறுதுணையாக இருக்கும் எமது மூளையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது எமது பொறுப்பு. மூளையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான வழிகளில் மிக முக்கியமான ஒரு வழி நோன்பு நோற்பதாகும்.

நோன்பிருப்பது பொதுவாக நமது அனைத்து ஆரோக்கியத்திலும் அழகான மாற்றங்களை ஏற்படுத்துவது பற்றி நாம் அறிவோம். அதில் எங்கள் மூளையில் ஏற்படுத்தும் மாற்றங்கள் மிகவும் வித்தியாசமானவை. விசித்திரமானவை. இது பற்றி துறைசார் வல்லுனர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு முக்கிய தகவல்களை முன்வைக்கின்றனர்.

சுமார் ஆறு மணிநேரம் நோன்பின் பிறகு, எமது உடல் HGH எனும் மனித வளர்ச்சி ஹார்மோன்களை அதிகமாக வெளியிடத் தொடங்குகிறது. இந்த ஹார்மோன் புரதத்தைப் பயன்படுத்துவதை விட கொழுப்பை எரிப்பதற்கு ஆதரவாக இருந்து வளர்சி மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எனவே புரதங்கள் பெரும்பாலும் பழுதடைந்த கலங்களை ஒழுங்கமைப்பு செய்வதுடன் மூளைக் கலங்களின் செயல்பாட்டை மேம்படுத்த பயன்படுகிறது. Human Growth Hormone (HGH) மனித வளர்ச்சி ஹார்மோன் உடலில் வீக்கத்தைக் குறைப்பதுடன் தன்னியக்கத்தை அதிகப்படுத்துவதைத் தூண்டுகிறது. தன்னியக்கவியல் என்பது பயன்படுத்தப்படாத அல்லது சேதமடைந்த கலக் கூறுகளை சுத்தம் செய்து மறுசுழற்சி செய்வதன் மூலம் நமது உயிரணுக்களின் ஆரோக்கியத்தையும் உயிர்வாழ்வையும் ஊக்குவிக்கிறது. மூளையில் இருந்து பெறப்பட்ட நியூரோட்ரோபிக் (BDNF) எனப்படும் புரதத்தின் அளவை நோன்பு அதிகரிக்கிறது. இந்த செயல்முறைகள் அனைத்தும் மூளையின் செயல்பாட்டில் நேர்மறையான விளைவைக் கொண்டிருக்கின்றன.

மூளையில் உருவாகும் இந்த மாற்றங்கள் அல்லது செயல்முறைகள் அனைத்தும் புரதச் சேமிப்பு, வீக்கத்தைக் குறைத்தல், தன்னியக்கச் செயற்பாடு என்பவற்றை சீராக்கி நமது மூளைக்கு பல நன்மைகளை கொண்டு சேர்க்கின்றன.

ஒருபுறம், அவை மூளை கலங்களுக்கு (cell) ஏற்படும் சேதத்தை குறைக்கின்றன. எடுத்துக்காட்டாக, அழற்சி எதிர்வினைகளைக் குறைப்பதன் மூலமும், மூளையில் உள்ள கழிவுகளை அகற்றுவதன் மூலமும். மறுபுறம், அவை சரியான மூளை செயல்பாட்டைத் தூண்டுவதன் மூலமும் கலங்களை பழுதுபார்ப்பதை ஊக்குவிப்பதன் மூலமும் புதிய மூளை காலங்களுக்கு இடையேயான இணைப்புகளை உருவாக்குவதன் மூலமும் பங்களிக்கின்றன.

அதேபோன்று மூளைக்குள் தகவல் தொடர்புகளை எளிதாக்குகிறது.

மேலும் இந்த புரதம் டிமென்ஷியா போன்ற முதுமையின் போது ஏற்படும் அறிவாற்றல் பிரச்சனைகள் அல்லது முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் சிக்கல்கள் உருவாகுவதை தடுக்கவும் செய்கிறது.

எனவே நோன்பு நரம்பியல் பாதிப்புகளுக்கு மருந்தாக இருக்கிறது என்பது பேருண்மை.

எனவே, இளமை பருவத்தில் இருந்து அல்லது பிள்ளை பருவத்திலிருந்தே நோன்பு நோற்பது மூளையை ஆரோக்கியமாக வைக்கவும் வயோதிபத்தை அடையும் போது ஏற்படும் பல நரம்பியல் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பு பெறவும் காரணமாக இருக்கிறது என்பதையே ஆய்வாளர்கள் உறுதி செய்து இருக்கிறார்கள்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

பயாஸா பாஸில்




# புனித ரமழான் மாதத்தை பயனுள்ள விதத்தில் கழிப்போம்

*புனித ரமழான் மாதம் முஸ்லிம்களுக்கு மிகவும் முக்கியமானதொரு மாதமாகும். இது பயபக்தி, இறையச்சம் , பொறுமை, சகிப்பு , கொடை, போன்ற உயர்ந்த பண்புகளை வளர்த்தெடுக்க உதவும் மாதமாகும்.*

*நல்லமல்கள் செய்து நன்மைகளை பெற்றுக் கொள்ள்ள ஓர் அற்புதமான வாய்ப்பாகும். இம்மாதத்தில் குர்ஆன் இறக்கியருளப்பட்டது. லைலதுல்-கதர் (அதிசய இரவு) இந்த மாதத்தில் இருப்பதால், இந்நாளில் செய்யப்பட்ட நற்காரியங்களுக்கு அதிகமான பலன் கிடைக்கும். நிறைந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.*

*ரமழான் மாதத்தை பயனுள்ள முறையில் கழிப்பது எப்படி?*

**1. நோன்பு நோற்றல்:**

*நோன்பு என்பது சீரான வாழ்க்கை முறையை வளர்க்க உதவும். இது உடல் ஆரோக்கியத்தையும், மனதின் தூய்மையையும் சீராக பராமரிக்கின்றது.*

**2. நேர்மையான வழியில் நேரத்தை செலுத்தல்:**

*இந்த மாதத்தில் சின்னச் சின்ன தவறுகளை கூட தவிர்த்து, நேரத்தை பயனுள்ளதாகச் செலவிட வேண்டும்.நன்மைகளை அதிகமாகச் செய்ய வேண்டும். நோயாளிகளை நலம் விசாரிக்கச் செல்ல வேண்டும். ஸதகா கொடுக்க வேண்டும்.*

**3. தொழுகை மற்றும் துஆ :**

*தினமும் ஐந்து நேர தொழுகையை தவறாமல் தொழ வேண்டும். மேலும், தனிப்பட்டு மற்றும் குடும்பத்தாருடன் இணைந்து துஆ செய்வது மிகுந்த நன்மையை தரும்.*

**4. குர்ஆன் ஓதுதல் :**

*இந்த மாதத்தில் குர்ஆனை முழுமையாக படித்து முடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது மனதை அமைதியாக்கி, அல்லாஹ்வின் அன்பைப் பெற உதவும்.*

**5. பொருளாதார உதவி மற்றும் இரக்கம்:**

*இல்லத்தரசிகள், ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். பணக்காரர்கள் ஜகாத் (தனதானம்) வழங்கி, சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும்.*

**6. சுய விசாரணை மற்றும் நல்ல பழக்க வழக்கங்கள்:**

*கோபம், பொய், வம்பு பேச்சு போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். நல்ல குணங்களை வளர்த்துக்கொள்வது ரமழான் மாதத்தின் உண்மையான பயனாகும்.*

**7. குடும்பத்துடன் நேரம் செலவிடுதல்:**

*குடும்பத்தினருடன் இணைந்து நோன்பு திறந்து, சமூக உறவுகளை வலுப்படுத்த வேண்டும். இது மனநிறைவை ஏற்படுத்தும்.*

*புனித ரமழான் மாதம் ஆன்மீக வளர்ச்சிக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் வழிவகுக்கும். இந்த மாதத்தில் நாம் அல்லாஹ்வுக்காக அன்பு, கருணை, பொறுமை ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதுடன், பிறருக்கு உதவி செய்வதன் மூலம் மறுமை வாழ்விற்கும் நன்மை அடையலாம். எனவே, ரமழான் மாதத்தை முழுமையாக பயனுள்ள விதத்தில் கழித்து, வாழ்வின் அர்த்தத்தை உணர்வோம்!*

# பொறுமையின் அவசியம்

ரமழான் மாதம் பல நல்லொழுக்கங்களை வளர்க்கும் மாதமாகும், குறிப்பாக பொறுமை எனும் ஒழுக்கத்தை இது அதிகமாக வளர்க்கிறது.

மனித வாழ்க்கையில் பல்வேறு சோதனைகள், சவால்கள், மகிழ்ச்சி, துக்கம் என பல நிலைகள் வருகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் பொறுமை மிக முக்கியமானது.

ரமழான் நோன்பு வைப்பது, உணவும், நீரும் இல்லாமல் கடினமான நேரங்களை கடப்பது, மற்றவர்களுடன் அமைதியாக நடப்பது. இவை அனைத்தும் பொறுமையை வளர்க்கும் செயலாகும்.

ரமழான் மற்றும் பொறுமை

1. உணவு மற்றும் தாகத்தால் பொறுமை – நாட்தோறும் சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை உணவின்றியும், தாகம் ஏற்பட்டாலும், மன உறுதியுடன் இருப்பது பொறுமையின் மிகச் சிறந்த உதாரணம்.

2. கோபத்தைக் கட்டுப்படுத்தும் பயிற்சி

ரமழான் மாதத்தில் ஒருவர் கோபம் கொண்டு பேசக்கூடாது, எவரையும் வஞ்சிக்கக் கூடாது என்பதால், நம் மனதை கட்டுப்படுத்தும் ஒரு பயிற்சியாகும்.

3. சமூக பொறுமை

மற்றவர்களுடன் நல்லிணக்கம் கொண்டு நடந்து கொள்ள வேண்டும், ஏழை எளியோருக்கு உதவ வேண்டும். இது சமூக பொறுமையை வளர்க்க உதவுகிறது.

4. இறைநம்பிக்கையால் பொறுமை

நோன்பு என்பதே இறைநம்பிக்கையின் அடையாளம். அல்லாஹ்வுக்காக நல்லொழுக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

ரமழான் மாதம் ஒரு முற்றுமுழுதான பொறுமையின் பயிற்சி மாதமாகும். இந்த மாதத்தின் மூலம் நாம் ஒவ்வொரு நாளும் பொறுமையை வளர்த்துக் கொள்ளலாம். பொறுமை இல்லாத வாழ்க்கை கஷ்டகரமாக இருக்கும், ஆனால் ரமழான் மூலம் அடையும் பொறுமை, வாழ்வில் அமைதி, ஒற்றுமை, இறைநம்பிக்கை ஆகியவற்றை அதிகரிக்க செய்யும். எனவே, நாம் இந்த புனித மாதத்தின் அருமையை உணர்ந்து, பொறுமையை வாழ்வில் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.



# பெண் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்



சமீஹா சபீர்



பெண்மையை போற்றும் விதமாக மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது

பெண்ணானவள் அன்பு, பொறுமை, சாந்தம், ஆக்கத்திறன், சிந்திக்கும் வேகம் என பல திறமைகளை கொண்டவர்களாக காணப்படுகின்றாள்.

சர்வதேச மகளிர் தினத்தை நாம் கொண்டாடும் வேளையில் பாலின சமத்துவத்தை அடைவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நம் முன் இருக்கும் சவால்களைப் பற்றி சிந்திப்பது அவசியம்

பல ஆண்டுகளாக நாம் முன்னேற்றம் அடைந்து வரும் போதிலும் உலகெங்கிலும் உள்ள பெண்கள் இன்னும் பல்வேறு துறைகளில் முழுமையாக செயல்பட முடியாத அளவிற்கு பல்வேறு தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

எனினும் பல பெண்கள் தடைகளை உடைத்து உத்வேகமாக செயல்பட்டு வருகின்றனர். சந்தேகத்திற்கு இடமின்றி தடைகளை உடைத்த பெண்கள் எதிர்கால சந்ததியினருக்கு முன்னோடியாக விளங்குகின்றனர். சர்வதேச மகளிர் தினம் என்பது வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல பெண்களுக்கு உரிய அதிகாரத்தை பெற்று தந்து பாலின சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கான நினைவூட்டலாகும்.

விஞ்ஞானிகள், புதிய தொழில்முனைவோர், கலை தொழில் என ஒவ்வொரு பிரிவிலும் பெண்கள் தடம்பதித்து குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்து வருகின்றனர். எனினும் நமது சாதனைகள் பெரும்பாலும் மறக்கடிக்கப்படுவதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். அபரிமிதமான திறமை இருந்தபோதிலும் பெண்கள் வரலாற்று ரீதியாகவே பாரபட்சங்களை சந்தித்துள்ளனர். இத்தகைய துன்பங்களை எதிர்கொண்டாலும் பெண்கள் விடாமுயற்சியுடன் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்.

தடைகளைத் தகர்த்து தனித்து நிற்கும் எண்ணற்ற பெண்களிடமிருந்து உத்வேகம் பெற்று முன்னேற வேண்டும்

நாட்டில் எத்தனையோ தினங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அதுவெல்லாம் ஒரு சடங்காக கொண்டாடப்பட்டு வரும் சூழ்நிலையில் பெண்கள் தினம் என்பதும் ஒரு சடங்காக அல்லாமல அது ஒரு மாற்றத்தின் தினமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

நாட்டில் பெண்களின் உரிமைகளையும் அவர்களுக்கான சுதந்திரத்தையும் பேசி வரும் இத்தருணத்தில் பெண்களின் நிலையை பற்றி ஆராய வேண்டும். பெண்களுக்கு எதிராக நடந்த அநியாயங்களையும், அக்கிரமங்களையும் சற்று சிந்தித்து பார்த்தால் பெண்களின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை நம்மால் அறிய முடியும்.

பெண்களின் மகத்துவத்தை மனதார உணர்ந்தவர்களாக பெண்ணியம் காக்க இந்த மகளிர் தின நாளில் உறுதி ஏற்போம்.

முந்தைய காலகட்டங்களில் பெண்களுக்கு அடக்குமுறைகள் அதிகம். அதை புறந்தள்ளிதான் இன்று பெண்கள் பல சாதனைகளை புரிந்து உயர்பதவிகளை அடைந்து சரித்திரம் படைத்துள்ளனர். இன்றைய பெண்கள் எல்லாம் கல்வியை ஒரு ஆயுதமாக கொள்ளவேண்டும். அதன்மூலமே உலகின் எந்த மூலைக்கும் சென்று சாதிக்க உதவுகிறது.

பெண்ணுக்கு எதிரி பெண்ணே என்றவாக்கை பொய்யாக்கவேண்டும். எதிர்மறையான எண்ணங்களை, செயல்களை விடுத்து நேர்மறையான சிந்தனைகளை கொண்டு வாழ்வில் சிறப்புகளை பெறவேண்டும்.

தற்போது சமூகத்தில் ஆண்களுக்கு கிடைக்க கூடிய அனைத்து விதமான உரிமைகளும் அதிகாரங்களும் பெண்களுக்கு சமநிலையில் கிடைக்கப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் காணப்பட்ட பெண் அடக்குமுறை குறைவடைந்து தற்காலத்தில் பெண்கள் சுதந்திரமாக தலை நிமிர்ந்து நடமாட கூடியதாக காணப்படுகிறது.

பெண்கள் சுதந்திரமாக விரும்பிய இடத்தில் வாழ்தல், விரும்பிய கல்வியை கற்றல், விரும்பிய தொழிலை செய்தல், ஆண்களுக்கு நிகராக ஊதியம் பெறல், உயர் பதவிகள் பெறல், தனது வாழ்க்கை துணையே தானே தேர்ந்தெடுத்தல் என பல சுதந்திர அதிகாரங்கள் காணப்படுகின்றன.

இன்றைய சமூகத்தில் பெண்கள் தங்கள் திறமைகளை அனைத்து துறைகளிலும் சிறந்த முறையில் வெளிப்படுத்துகின்றனர்.

கல்வி, விளையாட்டு, ஊடகம், விவசாய நடவடிக்கை, கைத்தொழில் செயல்பாடுகள்,மருத்துவ ஆய்வு, விண்வெளி ஆய்வு என பலவற்றில் பல சாதனைகளையும் புரிகின்றனர்.

இவை மட்டுமல்லாது குடும்பங்களை தலைமை தாங்கி சிறப்பான முறையில் நடத்துகின்றனர். பெண்களுடைய இத்தகைய சாதனைகள் நாட்டின் பொருளாதாரத்தில் பல மடங்காக அதிகரித்துள்ளது.

எம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது . பாலின சமத்துவத்தை ஏற்படுத்தி, பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதில் தற்போதைய இலங்கை அரசாங்கம் அக்கறையும் கொண்டுள்ளது .

பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் பெண்களை ஊக்குவிப்பதற்கும் உலகலாவிய ரீதியில் குறிப்பிடத்தக்க பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தாலும் கூட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான பெண்களின் முன்னேற்றத்திற்கு அநேக காரணிகள் சவாலாக உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு பெண்களின் பங்களிப்பு பெறப்படுவதை உறுதிசெய்வதற்கும் பெண்களை ஊக்குவித்தல் மற்றும் ஆண் - பெண் சமத்துவத்தை ஏற்படுத்தல் என்பவற்றிலும் இலங்கை தொடர்ந்தும் அக்கறையுடனேயே செயற்பட்டு வந்திருக்கின்றது எனலாம் .

எமது இலங்கை நாட்டில் 1931 ஆம் ஆண்டிலிருந்தே பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டுவிட்டது. அதேபோன்று 1960 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது பெண் பிரதமரையும் இலங்கையே உருவாக்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்றும் நம் நாடு ஒரு பெண் பிரதாமரையே கொண்டுள்ளது என்பதில் பெருமை கொள்வோம்

இன்று எமது இலங்கை பாராளுமன்றத்தில் விருப்பு வாக்குகளின் மூலம் 21 பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கையின் வரலாற்றில் அதிகப்படியான பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவான சந்தர்ப்பம் இதுவே.

இதிலிருந்து, பெண்கள் தங்களை அரசியல் களத்திலும் அதிகப்படியாக நிலை நிறுத்தி இருப்பதும் , தங்களால் மட்டுமே , தம்சார் பெண்களின் பிரச்சனைகளை அரசிய தளத்திலும் கொண்டு செல்லலாம் என்பதை நிரூபித்திருக்கிறார்கள் .

பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றம், அமைச்சுக்களின் செயலகங்கள், இராஜதந்திரப் பதவிகள் மற்றும் நீதித்துறை , நிர்வாகத்துறை ஆகியவற்றிலும் பெண்கள் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்து நாட்டில் பொருளாதார வலுவூட்டலுக்கு தங்கள் பங்களிப்பை செய்கிறார்கள் என்றால் அது மிகையாகாது .

அத்துடன் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பினை உறுதிசெய்வதோடு , சுயமாகவே தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அவர்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவும் வேண்டும் .

பெண்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதோடு ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போலவே எம் நாட்டு பெண்களுக்கும் அவர்களது உரிமைகளோடு மதிக்கப்பட வேண்டும் .

இந்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள். அப்பெண்கள் நாட்டின் பொருளாதார வளர்சிக்கு ஆற்றும் பங்களிப்பு பெரிதும் பாராட்டத்தக்கதாக உள்ளது .

மகளிர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

## பெண்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளைவாக மார்ச் 08 சர்வதேச மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்காக நம் நாட்டில் பல கலந்துரையாடல்களும் கருத்தாடல்களும் நடத்தப்பட்டிருந்தாலும், மேடைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அந்த கலந்துரையாடல்கள், பூமியில் ஒரு யதார்த்தமாக விதைக்கப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கட்டியெழுப்புவதில் இலங்கை பெண்களின் பங்களிப்பு மகத்தானது. அந்த மகத்தான பணிக்காக ஒரு அரசாங்கமென்ற வகையில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை, கடந்த குறுகிய காலத்தில் இலங்கைப் பெண்களுக்கு பல வெற்றிகளை அடைய தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம் என்பதையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

பல தசாப்தங்களாக கலந்துரையாடலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், பங்கேற்பு மற்றும் வகிபாகத்தை அதிகரித்து, கடந்த பொதுத் தேர்தலில் இருபத்தி இரண்டு பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இந்நாட்டின் அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்பதில் சந்தேகமில்லை.

அதேபோல், ஆண்- பெண் சமூக சமத்துவத்திற்கான சமூக நீதியை அடைவதற்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையான உற்பத்திப் பொருளாதார செயல்பாட்டில், இந்நாட்டின் சனத்தொகையில் 51.7மூ ஆக இருக்கும் பெண்களை தீவிரமாகவும் செயற்திறனுடனும் ஈடுபடுத்தும் திட்டத்தை நாம் செயல்படுத்தியுள்ளோம்.

நீதியான சமூகம், சுதந்திரமான நாடு, சுதந்திரமான பெண்கள் என்ற அபிலாஷைகளை அடையும் வகையில் வீடு, போக்குவரத்து, சமூகம், தொழிலிடம் மற்றும் அரசியல் உட்பட அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகள் மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் போன்ற பெண்களின் தனித்துவமான உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அரச கொள்கைகளை வகுப்பதற்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

இதற்கமைய, " சகல பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கும் சமத்துவம்,உரிமைகள் மற்றும் வலுவூட்டல் எனும் தொனிப்பொருளின் கீழ் " நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள் " என இந்த ஆண்டு மகளிர் தினத்தை ஏற்பாடு செய்வதிலுள்ள அர்த்தம் மற்றும் நடைமுறைச்சாத்தியம் என்பனவற்றை நினைவூட்ட வேண்டும்.

பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கும், நாட்டின் பெண்களுக்கு பாதுகாப்பான வாழ்வு மற்றும் நாகரிகமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கிய நமது பயணத்தில் முழுமையான பெண்கள் தலைமுறையினரின் ஆதரவை எதிர்பார்த்து சர்வதேச மகளிர் தினத்திற்கு எனது மனார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அரபாத் பஹுர்தீன்

# ஆர்ஜன்டீனா அணிக்கு எதிரான போட்டியில் பிரேசில் அணியில் நெய்மர்

பிரேசில் உதைப்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான நெய்மர் காயம் குணமடைந்து 17 மாதங்களின் பின்னர் தேசிய அணிக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

சமகால உலக உதைப்பந்தாட்டத்தில் உதைப்பந்தாட்ட உலகின் இளவரசன் என ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படுபவர்தான் பிரேசில் வீரர் நெய்மர். உலகப் புகழ் பெற்ற வீரர்களான கிறிஸ்டினோ ரொனால்டோ மற்றும் லயோனல் மெஸ்ஸி ஆகிய இருவருக்கும் பிறகு அதிக எண்ணிக்கையிலான ரசிகர்களை தன்னகத்தே கொண்டவர்– தான் நெய்மர்.

பிரேசில் தேசிய அணிக்காக விளையாடி வந்த நெய்மர் காயம் காரணமாக மிக நீண்ட காலம் ஓய்வில் இருக்கிறார். சௌதி அரேபியா லீக்கில் விளையாடி வந்த நெய்மர் இப்போது தான் சிறுவயதில் இணைந்த கழகமாக சன்டோஷ் கழகத்திற்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 33 வயதான நெய்மர் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடருக்கான தகுதி காண் போட்டியான நடப்புச் சம்பியனான ஆர்ஜன்டீனா அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்க பிரேசில் நிர்வாகத்தினால் 17 மாதங்களின் பின் அழைக்கப்பட்டுள்ளார். இதுவரையில் பிரேசில் அணிக்காக 128 போட்டிகளில் பங்கேற்றுள்ள நெய்மர் 79 கோல்களை உட்செலுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் பிரேசில் அணிக்காக அதிக கோல்களை உட்செலுத்தியவர் என்ற வரலாற்றுச் சிறப்பினையும் நெய்மர் தன் வசம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் முன்னாள் வீரரான பேலே விற்கு அடுத்த படியாக பிரேசில் மக்களால் கொண்டுடப்படும் உதைப்பந்தாட்ட வீரர் நெய்மர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# சகலதுறையில் பிரகாசத்து மே.இ. தீவுகள் மாஸ்டர்ஸ் அணியை வீழ்த்திய இலங்கை மாஸ்டர்ஸ் அணி



சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி20 தொடரில் நேற்று முன்தினம் (6) இடம்பெற்ற 4ஆவது லீக் ஆட்டத்தில் சகலதுறையில் அசத்திய இலங்கை மாஸ்டர்ஸ் அணி 21 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணியை வீழ்த்தியது.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி20 தொடரில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் இலங்கை மாஸ்டர்ஸ் அணியை முன்னாள் நட்சத்திர வீரரான குமார் சங்கக்காரா வழிநடாத்துகின்றார்.

மேலும் இத் தொடரின் முதல் சுற்றில் ஒரு அணி மற்றைய 5 அணிகளுடனும் தலா ஒரு முறை போட்டியிட வேண்டும். பின்னர் புள்ளிப் பட்டியலில் முதல் 4 இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெற்று பின்னர் இறுதிப்போட்டியில் இரு அணிகள் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் லீக் சுற்றில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணியை இந்தியாவின் வடடோரோ மைதானத்தில் எதிர்த்தாடியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பாடிய இலங்கை மாஸ்டர்ஸ் அணிக்கு அஷேல குணரட்ண அரைச்சதம் கடந்து 64 ஓட்டங்களையும், குமார் சங்கக்காரா 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் அஸ்லி நேர்ஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 174 என்ற சவால்மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணியால் நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

துடுப்பாட்டத்தில் டுவைன் ஸ்மித் 49 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்தேவீச்சில் இசுரு உதான 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன் மூலம் 21 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை மாஸ்டர்ஸ் அணி தாம் சந்தித்த 4 போட்டிகளில் 3ஆவது வெற்றியினைப் பதிவு செய்ததுடன் மொத்தம் 6 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் 2ஆவது இடத்தில் நீடிக்கின்றது.

# சம்பியன் கிண்ண இறுதிப் போட்டி: பலப்பரீட்சை நடத்தப்போகும் இந்தியா- நியூசிலாந்து



9ஆவது சம்பியன் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா – நியூசிலாந்து அணிகள் எதிர்வரும் 9ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாயில் மோத உள்ளன.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஏற்பாட்டில் 9 ஆவது சம்பியன் கிண்ணத் தொடரை பாகிஸ்தான் நடாத்தி வருகின்றது. இதில் பாகிஸ்தானின் எதிரி நாடாகப் பார்க்கப்படும் இந்தியா – பாகிஸ்தான் செல்ல மறுத்தமையால் இந்திய அணி பங்கேற்ற போட்டிகள் அனைத்தும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய் சர்வதேச மைதானத்திலே இடம்பெற்று வந்தன. அந்தவகையில் இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமையால் இறுதிப் போட்டியும் துபாயில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேலும் இவ் சம்பியன் கிண்ணத் தொடரில் கடந்த 2024 இல் அணிகளின் தரப்படுத்தலில் முதல் 8 இடங்களைப் பெற்ற அணிகளே இதில் பங்கேற்றிருந்தன. அதன் காரணமாக இலங்கை மற்றும் மேற்கத்திய தீவுகள் ஆகிய அணிகள் இதில் பங்கேற்கவில்லை.

மேலும் குழு நிலை லீக் சுற்று முடிவில் குழு ஏ இல் முதலிடம் பெற்ற இந்திய அணி குழு பி இல் 2ஆம் இடம் பெற்ற அவுஸ்திரேலிய அணியை அரையிறுதிப் போட்டியில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் குழு பி இல் முதலிடம் பெற்ற தென்னாபிரிக்க அணியை , குழு ஏ இல் 2ஆம் இடம் பிடித்த நியூசிலாந்து அணி வென்று மீண்டும் இறுதிப் போட்டியில் தடம் பதித்தது.

அத்துடன் இந்த தொடரில் இந்திய அணி தான் பங்கேற்ற போட்டிகளில் தோல்வியே சந்திக்காமல் இறுதிக்குள் நுழைந்திருக்க, மறுபுறம் நியூசிலாந்து அணி லீக் சுற்றில் இந்தியாவுக்கு எதிராக 50 ஓட்டங்களால் தோல்வி அடைந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் இரு அணிகளும் மோதிக்கொள்ளும் தீர்மாணமிக்க இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 9ஆம் திகதி துபாயில் இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய சுப்பர் லீக் போட்டிகள்: இம்மாதம் 13இல் ஆரம்பம்








இலங்கை கிரிக்கெட் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடப்பாண்டிற்கான தேசிய சுப்பர் லீக் (NSL) நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான போட்டி அட்டவணையினை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தேசிய சூப்பர் லீக் தொடரில் மொத்தம் 5 அணிகள் களம் கண்டுள்ளன. அந்தவகையில் இலங்கையில் இருக்கும் சர்வதேச கிரிக்கெட் மைதானங்கள் அமைந்துள்ள இடங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி கொழும்பு, கண்டி, காலி , தம்புளை ஆகிய அணிகளுடன் ஹம்பாந்தோட்டை இடம்பெறாமல் அதற்கு பதிலாக யாழ்ப்பாணம் உள்வாங்கப்பட்டு மொத்தம் 5 அணிகள் இத் தொடரில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இந்த நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் தொடரி தொடரானது இம்மாதம் 13 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் இப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானம், காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம், கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச மைதானம், தம்புள்ளை ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானம், பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் SSC மைதானம் உள்ளிட்ட ஆறு மைதானங்களில் நடைபெறவுள்ளன.

மேலும் இத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா ஒரு முறை பலப்பரீட்சை நடாத்தவுள்ளது. அவ்வாறு முதல் லீக் சுற்று முடிவில் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல, இம்மாதம் 13 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள முதல் போட்டியில் காலி மற்றும் கண்டி அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.